# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# மானியக் கோரிக்கை எண்.44

# 2018 – 2019

**பா.பென்ஜமின்**
**ஊரகத் தொழில் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2018

# உள்ளடக்கம்


| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | தொழில் வணிக ஆணையரகம் | 11 |
| 3. | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) | 55 |
| 4. | தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI) | 86 |
| 5. | தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN) | 92 |

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2018–19

## 1. முகவுரை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய உந்து சக்தியாக திகழ்கின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு உருவாக்கம், குறைவான முதலீடு, புதுமையான முயற்சி, பிராந்திய வளர்ச்சி, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி, கிடைக்கும் வளத்தை ஒன்று திரட்டுவது மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றிற்கு முக்கிய பங்களிப்பு அளிக்கின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உலகமயமாக்கலினால் நிதி மற்றும் தொழில்நுட்பம் உடைய பங்குதாரர்களை ஈர்க்கும் தனித்தன்மை வாய்ந்தவை. இந் நிறுவனங்கள் தொழில் முனைவோரின் தன்னம்பிக்கை, புதுமையான முயற்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு சிறப்பான பங்களிப்பை தருகின்றன.

## 1.1 இந்தியப் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு

கடந்த ஆண்டுகளில் இந்திய பொருளாதாரத்தின் தீவிர வளர்ச்சிக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மிக துடிப்பான மற்றும் முக்கியமான மாற்றங்களைக் கொண்டு இத்துறை செயலாற்றி வருகின்றது. நாட்டில் சுமார் **6,000** வகையான பாரம்பரிய பொருட்கள் உற்பத்தி செய்வதில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதுடன் நாட்டின் மொத்த உற்பத்தியில் **45** விழுக்காடு உற்பத்தி செய்து சுமார் **40** விழுக்காடு ஏற்றுமதி (நேர்முகமாகவும் மற்றும் மறைமுகமாகவும்) செய்கின்றன. நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பாராட்டுக்குரிய புதுமைத்தன்மையுடன் சுறுசுறுப்பாகவும் மற்றும் மாற்று சக்தியாகவும் தனித்தன்மை கொண்டு பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றுகிறது. நாட்டின் உத்தேச உற்பத்திக் கொள்கை குறிக்கோளான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் உற்பத்தி பங்களிப்பு **2022**ஆம் ஆண்டு முடிவில் **16** விழுக்காட்டிலிருந்து **25**

விழுக்காடு வரை வளர்ச்சியை இலக்காகக் கொண்டு செயலாற்றி வருகின்றது.

## 1.2 தமிழ் நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அபரிதமான வளர்ச்சியும் தனித்தன்மை கொண்டு பல்வேறு விதமான பொருட்களை தயாரித்து வருகின்றது. இதில் முக்கியமாக ஜவுளி, பொறியியல் பொருட்கள், தானியங்கி, மின் பொருட்கள், தோல் பொருட்கள், நெகிழி பொருட்கள் (பிளாஸ்டிக்) மற்றும் ஆயத்த ஆடைகள் முதலான பொருட்கள் தயாரிப்பதில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றுகிறது.

சுமார் **17.79** இலட்சம் தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி-**2** மற்றும் உத்யோக் ஆதார் பதிவறிக்கை பதிவு செய்யப்பட்டு, சுமார் **113.57** இலட்சம் நபர்களுக்கு **ரூ.1,93,704.90** கோடி முதலீட்டில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட உத்யோக் ஆதார் பதிவறிக்கையினைத் தொடர்ந்து **21.1.2016**

முதல் உத்யோக் ஆதார் பதிவறிக்கை செயலாக்கத்திற்கு வந்த பிறகு, தமிழ்நாட்டில் **31.3.2018** வரை **5,26,947** நிறுவனங்கள் உத்யோக் ஆதார் பதிவறிக்கை பெற்றுள்ளன. இவற்றில் முறையே **4,63,836** குறுந் தொழில் நிறுவனங்கள், **61,613** சிறு தொழில் நிறுவனங்கள் மற்றும் **1,498** நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகும்.

**தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி**

| ஆண்டு | நிறுவனங்களின் எண்ணிக்கை | முதலீட்டு அளவு (ரூ.கோடியில்) | உற்பத்தி அளவு (ரூ.கோடியில்) | வேலை வாய்ப்பு (எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| 2007–08 | 27,209 | 2,547.14 | 8,739.95 | 2,42,855 |
| 2008–09 | 32,049 | 3,557.89 | 13,354.86 | 2,94,255 |
| 2009–10 | 41,799 | 3,214.22 | 10,880.01 | 1,51,743 |
| 2010–11 | 57,902 | 5,872.37 | 12,500.86 | 4,05,233 |
| 2011–12 | 70,758 | 7,429.59 | 15,496.00 | 5,02,381 |
| 2012–13 | 83,348 | 8,751.54 | 17,503.08 | 5,83,436 |
| 2013–14 | 1,16,393 | 18,939.87 | 16,832.25 | 4,94,990 |
| 2014–15 | 1,43,104 | 24,349.65 | 59,789.70 | 6,51,180 |
| 2015–16 (21.1.2016 வரை) | 1,42,136 | 34,411.90 | 59,332.19 | 8,15,315 |

| | | | | |
|---|---|---|---|---|
| உத்யோக் ஆதார் (31.03.2016 வரை) | 41,656 | 6,218.69 | – | 2,96,687 |
| 2016–17 | 2,67,310 | 36,221.78 | – | 18,97,619 |
| 2017–18 | 2,17,981 | 25,373.12 | – | 13,78,544 |

## 1.3 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை வலுவூட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் புதிய முயற்சிகள்

### 1.3.1 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான ஒற்றைச் சாளர தீர்வுக்குழு

தமிழகத்தில் தொழில் தொடங்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு தொழில் உரிமங்கள் மற்றும் அனுமதிகளை விரைவாக பெற்று தருவதற்கு மாவட்டத் தொழில் மையத்தில் செயல்படும் ஒரு முனை தீர்வுக்குழு வாயிலாக விரைந்து பெற்று அளித்திட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. **2017–18**ஆம் ஆண்டு மாநில அளவில் **403** விண்ணப்பங்கள் பெறப்பட்டதில், **371** விண்ணப்பங்களுக்கு உரிய தீர்வு வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு, தனது பணி நடவடிக்கைகளை எளிதாக்கும் நடவடிக்கையில் தொடர்ந்து கவனம் செலுத்தி

வருகின்றது. இதனை செயலாக்கும் பொருட்டும் தொழில் முனைவோர் நட்புறவுச் சூழலை உருவாக்கும் பொருட்டும், உள்நாட்டு மற்றும் உலகளாவிய வர்த்தக சமூகத்தினருக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கிட முக்கிய தொழில்நுட்பம் வாயிலாக ஒற்றைச் சாளர தகவு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒற்றைச் சாளரதகவு மூலமாக, நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டமிடல் துறை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி, தொழிலாளர் மற்றும் தொழிலகப் பாதுகாப்பு, சுகாதார இயக்ககம் போன்ற 11 அரசுத் துறைகளின் மூலம் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு அனுமதிகளை வழங்குதல் மற்றும் அனுமதிகளை புதுப்பித்தல் ஆகிய சேவைகளை பெற இயலும். இவ்வசதியின் மூலம், மனித நேரடித்தொடர்பு இன்றி மேற்படி 11 அரசு துறைகளின் சேவைகளை முதலீட்டாளர்கள் இணையம் மூலம் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான இணையதள வழி ஒற்றைச் சாளர தகவு (https://www.easybusiness.tn.gov.in/msme) **4.5.2018** அன்று தொடங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

### 1.3.2 தமிழ்நாடு வணிக நடைமுறைகள் எளிதாக்கும் சட்டம் / விதிகள் 2018

தமிழ்நாட்டை இந்தியாவின் மிக முதன்மையான தொழில் முதலீட்டுக் களமாக மாற்றும் உயரிய நோக்கத்துக்கு துணை செய்யும் விதமாக வணிக நடைமுறைகள் எளிதாக்கும் / மேம்படுத்தும் சட்டம் 2018 இயற்றப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்கள் தேவையான விவரங்கள் அடிப்படையில் முதலீட்டு முடிவுகளை எடுப்பதையும் தொழில் நிறுவனங்களை உருவாக்கவும் மற்றும் விரிவாக்கவும் தேவையான உரிமங்கள்/அனுமதிகள் தொழில் தொடங்கும் முன்பும்/ நடத்தும் போதும் உரிய காலமுறையில் பெறப்படவேண்டிய புதுப்பித்தல்கள் உட்பட விண்ணப்பங்கள் ஒரு முனையில் பெறப்பட்டு பரிசீலிக்கப்படுவதையும், திறன்மிக்க குறைதீர்ப்பு அமைப்பை உருவாக்குவதையும் உரிய காலகெடுவுக்குள் தகுந்த அதிகாரிகள் உரிய முறையில் செயல்பட தவறும்பட்சத்தில் அவர்களுக்கு தண்டனை விதிப்பதையும் இச்சட்டம் உறுதி செய்கிறது.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மாநிலத்தில் முதலீட்டாளர்களுக்கு தோழமையான நற்சூழலை உருவாக்கவும் உரிய காலக்

கெடுவுக்குள் பல்வேறு சம்மந்தப்பட்ட அரசுத்துறையினர் விண்ணப்பங்களை பரிசீலனை செய்து, அதற்குண்டான உரிமம் / அனுமதிகள் வழங்குவது இன்றியமையாதது ஆகிறது. இச்சட்டம் தொழில் நிறுவன கட்டுமானத்திற்கு முந்தைய, உற்பத்திக்கு முந்தைய, உரிய அனுமதிகள், புதுப்பித்தல்கள் மற்றும் மானியங்கள் உள்ளிட்ட 54 இனங்களை உள்ளடக்கியுள்ளன.

இந்த ஒற்றைச் சாளர அமைப்பினை செயல்படுத்த மாவட்டத் தொழில் மையங்கள் / அரசுத்துறை தொழில் வழிகாட்டு நிறுவனம் ஆகிய இரு அலுவலகங்கள் முறையே குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுக்கு உரிய அமைப்புகளாக நிர்ணயிக்கப் பட்டுள்ளன.

இச்சட்டத்தின் கீழ், ஒற்றைச் சாளர அமைப்பு முறையின் செயல்பாடுகளை சீராய்வு செய்வதற்காக 3 அடுக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1. மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குரிய ஒற்றைச் சாளர அமைப்பு
2. மாநில குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குரிய ஒற்றைச் சாளர அமைப்பு

3. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குரிய முதலீட்டு மேம்பாடு மற்றும் கண்காணிப்பு வாரியம்

## 1. 4 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வரையறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006இன் படி நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் இயந்திரம் மற்றும் தளவாடங்களின் மதிப்பீட்டின் (நிலம் மற்றும் கட்டடங்கள் நீங்கலாக) அடிப்படையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பின் வருமாறு வகைபடுத்தப்பட்டுள்ளன.

| வகைப்பாடு | உற்பத்தி நிறுவனங்களின் மூலதன மதிப்பீடு | சேவை நிறுவனங்களின் மூலதன மதிப்பீடு |
|---|---|---|
| குறு உற்பத்தி நிறுவனங்கள் | ரூ.25 இலட்சம் வரை உள்ளவை | ரூ.10 இலட்சம் வரை உள்ளவை |
| சிறு உற்பத்தி நிறுவனங்கள் | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.5 கோடி வரை உள்ளவை | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.2 கோடி வரை உள்ளவை |
| நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் | ரூ.5 கோடிக்கு மேல் ரூ.10 கோடி வரை உள்ளவை | ரூ. 2 கோடிக்கு மேல் ரூ.5 கோடி வரை உள்ளவை |

## 1.5 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

இத்துறையில் கீழ்கண்ட முக்கிய அலுவலகம் / நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன:-

அ) தொழில் வணிக ஆணையரகம் (Commissionerate of Industries & Commerce)

ஆ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (Tamilnadu Small Industries Development Corporation Ltd. (SIDCO))

இ) தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் ( Tamilnadu Small Indsutries Cororation Ltd. (TANSI))

ஈ) தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (Entrepreneurship Development and Innovation Institute- Tamil Nadu (EDII-TN))

உ) தாய்கோ வங்கி / இன்கோசர்வ் மற்றும் சேகோசர்வ் (TAICO Bank / INDCOSERVE / SAGOSERVE) போன்ற கூட்டுறவு நிறுவனங்கள்

## 2. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வணிக ஆணையரகம் பொதுவாக மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும், குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் ஒருங்கிணைந்த தலைமையகமாக விளங்குகிறது. மாநிலத்திலுள்ள 32 மாவட்ட தொழில் மையங்கள், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்ட தொழில் மையங்கள் மாவட்ட அளவில் தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு உகந்த தொழில்களைக் கண்டறிதல், தொழில் திட்ட அறிக்கையினைத் தயாரித்தல், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகளை பெற்றுத் தருதல், தொழில் துவங்க அரசின் பல்வேறு துறை சார்ந்த ஒப்புதல்களைப் பெற்று அளித்தல், அரசு மானியங்கள் மற்றும் ஊக்குவிப்பு தொகைகளை வழங்குதல், குறு மற்றும் சிறு தொழில் நிறுவன வசதியாக்கக் குழு மூலம் நிலுவையிலுள்ள தொகையினை பெற்றுத் தருதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றன.

## 2.1 உத்யோக் ஆதார் பதிவறிக்கை

தொழிலை எளிதாக்குதல் எனும் இலக்கை எளிதில் அடைய உத்யோக் ஆதார் எண் பதிவு முறையை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. ஒவ்வொரு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களும் தங்கள் உத்யோக் ஆதார் குறிப்பாணையினை பதிவேற்றம் செய்ய, மைய அரசின் 18.9.2015 நாளிட்ட அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. இதற்கு எந்த ஒரு கட்டணமும் இல்லை. மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையால் பராமரிக்கப்படும் http://udyogaadhaar.gov.in எனும் வலை தளத்தில் உத்யோக் ஆதார் குறிப்பாணையினை பதிவேற்றம் செய்ய முடியும். இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்ய இயலாத சூழ்நிலையில் சம்பந்தப்பட்ட மாவட்ட தொழில் மைய மேலாளர்கள் விபரங்களை பெற்று தொழில் முனைவோர் சார்பாக இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்யலாம். உருவாக்கப்பட்ட உத்யோக் ஆதார் எண், சம்பந்தப்பட்ட தொழில் முனைவோருக்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சட்டம் 2006–இன்படி EM பகுதி-2 பதிவு பெற்றவர்கள் அல்லது சிறுதொழில் முனைவோராக பதிவுச் சான்றை வைத்துள்ளவர்கள் இந்த உத்யோக் ஆதார் எண்ணை பெற வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்கள் விருப்பப்பட்டால் அவர்களும் இதனை பதிவேற்றம் செய்யலாம்.

**உத்யோக் ஆதார் பதிவறிக்கை**

| நிறுவனங்கள் | உத்யோக் ஆதார் வகை | பிரிவு | இயந்திரம் / தளவாடங்கள் முதலீட்டு அலகு |
|---|---|---|---|
| குறு நிறுவனங்கள் | A | உற்பத்தி | 25 இலட்சத்திற்கு மிகாமல் |
| | D | சேவை | 10 இலட்சத்திற்கு மிகாமல் |
| சிறு நிறுவனங்கள் | B | உற்பத்தி | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.5 கோடி வரை |
| | E | சேவை | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.2 கோடி வரை |
| நடுத்தர தொழில் நிறுவனங்கள் | C | உற்பத்தி | ரூ.5 கோடிக்கு மேல் ரூ.10 கோடி வரை |
| | F | சேவை | ரூ.2 கோடிக்கு மேல் ரூ.5 கோடி வரை |

## 2.2 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன சலுகை திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, அரசு கீழ்க்காணும் சலுகைத் திட்டங்களை வழங்கி வருகிறது:

### 2.2.1 முதலீட்டு மானியம்

- தகுதியான இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் **25** விழுக்காடு முதலீட்டு மானியம் அதிகபட்சமாக ரூ.**30** இலட்சம் வரை
- மகளிர், பட்டியலிடப்பட்ட இனம் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர் தொழில் முனைவோராக இருக்கும் நேர்வுகளில், தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் மதிப்பில் **5** விழுக்காடு, அதிகபட்சம் ரூ.**2** இலட்சம், கூடுதல் முதலீட்டு மானியம்
- மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு இயைந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின்

மதிப்பில் **25** விழுக்காடு, அதிகபட்சம் ரூ.**3** இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம்

- வேலைவாய்ப்பு பெருக்க மானிய திட்டத்தின் கீழ் இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் மதிப்பில் **5** விழுக்காடு அதிகபட்சம் ரூ.**5** இலட்சம் மானியம்

**அடிப்படைத் தகுதி**

- மாநிலத்தில் எப்பகுதியிலும் நிறுவப்படும் அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்
- தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் அமைக்கப்படும் கீழ்க்காணும் **13** சிறப்பு வகை உற்பத்தி தொழில் நிறுவனங்கள் கூடுதல் முதலீட்டு மானியம் மற்றும் வேலைவாய்ப்பு பெருக்க மானியம் நீங்கலாக:
    - மின் மற்றும் மின்னணு பொருள்கள்
    - தோல் மற்றும் தோல்பொருள்கள்
    - வாகன உதிரிப் பாகங்கள்
    - மருந்து மற்றும் மருத்துவப் பொருள்கள்
    - சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள்
    - ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள்
    - மாசுக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள்
    - விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உதிரிபாகங்கள்

- சிக்கன அடக்கவிலை கட்டுமானப் பொருள்கள்
- ஆயத்த ஆடைகள்
- உணவுப் பதப்படுத்துதல்
- பிளாஸ்டிக்
- ரப்பர் பொருட்கள்

➢ தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய **251** வட்டாரங்களில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள்

➢ மாநிலத்தின் **385** வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண்சார் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

➢ மேற்கண்ட வகையைச் சார்ந்த தற்போது இயங்கி வரும் நிறுவனங்கள் விரிவாக்கம் மற்றும் மாற்றுத் தொழில்கள் துவங்கும் பொழுது

➢ **2011–12** முதல் **2017–18** வரை **10,504** பயனாளிகளுக்கு ரூ.**57,000** இலட்சம் மூலதன மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு **2017–18**இல் மட்டும் **2,102** பயனாளிகளுக்கு ரூ.**16,000** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. **(**இணைப்பு **2.1)**

## 2.2.2 குறைந்தழுத்த மின் மானியம்

**20** விழுக்காடு குறைந்த அழுத்த மின் மானியம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வணிக ரீதியாக உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து **36** மாதங்களுக்கு வழங்கப்படுகிறது**.**

**அடிப்படைத் தகுதி**

- மாநிலத்தில் எப்பகுதியிலும் நிறுவப்படும், அனைத்து புதிய குறுந்தொழில் உற்பத்தி நிறுவனங்கள்
- மாநிலத்தின் **385** வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளான் சார் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்
- தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய **251** வட்டாரங்களில் அமைக்கப்படும் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தித் தொழில் நிறுவனங்கள்
- மேற்கண்ட வகையைச் சார்ந்த தற்போது இயங்கி வரும் நிறுவனங்கள் விரிவாக்கம் மற்றும் மாற்றுத் தொழில்கள் துவங்கும்பொழுது

2011-12 முதல் 2017-18 வரை 7,308 பயனாளிகளுக்கு ரூ.**4,264.16** இலட்சம் குறைந்தழுத்த மின் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு 2017-18இல் மட்டும் **671** பயனாளிகளுக்கு ரூ.**600** இலட்சம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது. **(இணைப்பு 2.2)**

### 2.2.3 மின்னாக்கி மானியம்

இம்மானியத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் எப்பகுதியிலும் அமைந்துள்ள குறு சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் வாங்கியுள்ள மின்னாக்கியின் மதிப்பில் **25** விழுக்காடு **(320** KVA வரை**)** அதிகபட்சமாக ரூ. **5** இலட்சம் வரை மின்னாக்கி மானியம் வழங்கப்படும்.

2011-12 முதல் 2017-18 வரை 8,583 பயனாளிகளுக்கு ரூ.**9,948.09** இலட்சம் மின்னாக்கி மானியம் வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு 2017-18இல் மட்டும் **161** பயனாளிகளுக்கு ரூ.**200** இலட்சம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது. **(இணைப்பு 2.3)**

### 2.2.4 பின்முனை வட்டி மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும்

நவீனப்படுத்துதல் மற்றும் கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டம் ஆகியவற்றிற்காக வாங்கும் ரூ.1 கோடி வரையிலான கடன்களின் மீது 5 ஆண்டுகளுக்கு 3 விழுக்காடு என்ற அளவில் அதிகமாக ரூ.10 இலட்சம் பின்முனை வட்டி மானியமாக வழங்கப்படுகிறது.

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீன படுத்துவதற்காக, கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டம் போன்ற அனைத்து திட்டங்களின் கீழ் பெறும் காலக்கடன்களுக்கும், 3 விழுக்காடு பின்முனைவட்டி மானியம் பெற தகுதியுடையவையாகும்.

(அ) 2011-12 முதல் 2017-18 வரை 499 பயனாளிகளுக்கு ரூ.478.35 இலட்சம் தொழில்நுட்ப மேம்பாடு, நவீன மயமாக்கல் – பின்முனை வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு 2017-18இல் மட்டும் 73 பயனாளிகளுக்கு ரூ.30.00 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது. **(இணைப்பு 2.4 (அ))**

(ஆ) 2011–12 முதல் 2017–18 வரை 307 பயனாளிகளுக்கு ரூ.79.44 இலட்சம் – கடன் உத்தரவாத நிதிகுழும திட்ட – பின்முனை வட்டி மானியம்

வழங்கப்பட்டுள்ளது. நிதியாண்டு 2017–18இல் மட்டும் 101 பயனாளிகளுக்கு ரூ.25 இலட்சம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

**(இணைப்பு 2.4 (ஆ)**

### 2.2.5 ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் திட்டம் (PEACE)

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்பு முறைகளில் பயன்படுத்தப்படும் ஆற்றலை தணிக்கை செய்து ஆற்றலை சேமித்து, நிறுவனத்தின் லாபத்தை அதிகப்படுத்தி, சுற்றுப்புற சூழலை பாதுகாக்கும் வகையில் அரசானது ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பு மேம்படுத்துதல் திட்டம் (PEACE) என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் பயனாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் தணிக்கை கட்டணத்தில் 50 விழுக்காடு மானியமாகவும், ஆற்றல் சேமிப்பிற்காக பெறப்படும் தொழில்நுட்பம், நிறுவப்படும் எந்திரங்களுக்கு 25 விழுக்காடு மானியமாகவும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் நான்கு முக்கிய கூறுகளாவன:

அ) விழிப்புணர்வு கூட்டம் நடத்துதல்

ஆ) பயிற்சி அளித்தல்

இ) விரிவான ஆற்றல் தணிக்கைக்கான ஊக்கத் தொகை

ஈ) ஆற்றல் தணிக்கை அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறை படுத்துவதற்கான ஊக்கத்தொகை

**ஆற்றல் தணிக்கைக்கான ஊக்கத்தொகை**

ஆற்றல் தணிக்கைக் கட்டணத்தில் **50** விழுக்காடு மானியமாக, அதிகபட்சம் ரூ.**75,000/–** வரை வழங்கப்படுகிறது**.**

**ஆற்றல் தணிக்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான ஊக்கத்தொகை**

ஆற்றல் சேமிப்பிற்காக பெறப்படும் தொழில்நுட்பம் மற்றும் நிறுவப்படும் எந்திரங்களுக்கு **25** விழுக்காடு வரை மானியமாக, அதிகபட்சம் ரூ.**2,00,000/–** வரை வழங்கப்படுகிறது**.**

## 2.3 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Umemployed Youth Employment Generation Programme (UYEGP))

அரசானது சமுதாயத்தில் பின்தங்கி உள்ளவர்களை முன்னேற்ற, படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தை நடைமுறைபடுத்தி உள்ளது**.** இத்திட்டம் மூலம் உற்பத்தி / சேவை / வியாபார

நிறுவனங்கள் தொடங்கிட முறையே அதிகபட்சம் ரூ.10 இலட்சம் / ரூ.3 இலட்சம் / ரூ.1 இலட்சம் வரையான திட்டங்களுக்கு பொருந்தும். திட்ட மதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிகபட்சம் ரூ.1,25,000 தொகை அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. விண்ணப்பதாரர்கள், நேரடியாக இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் முறை, கடந்த 1.8.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள், www.msmeonline.tn.gov.in/uyegp என்ற இணையதளத்தின் மூலம் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம்.

| **தகுதிகள்** | |
|---|---|
| குறைந்தபட்ச வயது வரம்பு<br><br>அதிகபட்ச வயது வரம்பு | 18 வயது<br><br>35 வயது வரைக்கும் (பொது பிரிவினர்) |
| சிறப்பு பிரிவினர் | 45 வயது வரைக்கும் (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/பெண்கள்/ மாற்றுத்திறனாளிகள் / முன்னாள் இராணுவத்தினர்/ திருநங்கைகள்) |
| கல்வித் தகுதி | 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |

சூவலையில்லா இளைஞர்களுக்கான வேலை–வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்(UYEGP) கீழ் **2011–12** முதல் **2017–18** வரை, **33,582** பயனாளிகளுக்கு ரூ.**15,941.55** இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடப்பாண்டில் **(2017–18)** மட்டும் **4,707** பயனாளிகளுக்கு ரூ.**3,000** இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. **(இணைப்பு 2.5)**

## 2.4 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (New Entrepreneur–cum-Enterprise Development Scheme (NEEDS))

படித்த முதல் தலைமுறை இளைஞர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் **2012–13** ஆம் ஆண்டு முதல், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்(NEEDS) என்ற திட்டத்தினை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டமானது, முதல் தலைமுறை தொழில் முனைவோர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல், தொழில் முனைவு பணிகளுக்கு உதவுதல், தொழில் தொடங்க திட்டங்கள் தயாரித்தல், நிதி நிறுவனங்களின் நிதியுதவி பெற உதவுதல் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுடன் வணிக தொடர்பு அமைத்து தருதல் போன்றவற்றை அளித்து வருகிறது.

பயனாளிகள் 21 வயது முதல் 45 வயது வரை உள்ளவராகவும், ஏதாவது ஒரு பட்டப்படிப்பு, பட்டய படிப்பு, ஐடிஐ (ITI), அல்லது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தொழிற் பயிற்சி சான்றிதழ் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் கீழ், 1,000 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால்(EDII) தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மொத்த பயனாளிகளில், 50 விழுக்காடு மகளிருக்கு ஒதுக்கீடு அளித்து பயிற்சி அளிக்கப்பட்டு, வங்கிகள்/ தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), ஆகியவற்றிடமிருந்து காலக்கடன் பெறுவதற்கு உதவி செய்யப்படுகிறது. மேலும், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (SIDCO), தொழிற் பேட்டைகளிலுள்ள மனைகள் /தொழிற்கூடங்களில் இடம் இருக்கும் பட்சத்தில், அதில் அவர்களுக்கு 25 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படும்.

இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையில் பட்டியலிடப்பட்ட இனப் பயனாளிகள்/ பட்டியலிடப்பட்ட

பழங்குடியினர் மற்றும் மாற்று திறனுடைய பயனாளிகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்து முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

உற்பத்தி மற்றும் சேவைத் தொழில் திட்டங்களுக்கு, திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 25 விழுக்காடு முதலீட்டு மானியம் (ரூ 25 இலட்சத்திற்கு மிகாமல்) வழங்குவதோடு வங்கிக் கடனுக்காக வட்டியில் 3 விழுக்காடு பின்முனை வட்டி மானியம், கடன் திரும்ப செலுத்தும் காலம் முழுவதிற்கும் வழங்கப்படும். திட்ட மதிப்பீடு, குறைந்த பட்சம் ரூ.10 இலட்சத்திற்கு மேலும் அதிகபட்சம் ரூ.5 கோடிக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1 கோடிக்கு மிகும் திட்டங்களுக்கான மானியம், அதிக பட்சம் ரூ.25 இலட்சம் வரையறுக்கப்பட்டுள்ளது.

திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பாக பொதுப் பிரிவினருக்கு 10 விழுக்காடும், சிறப்பு பிரிவினர்/ பட்டியலிடப்பட்ட பிரிவினருக்கு 5 விழுக்காடும் இருத்தல் அவசியம்.

மாநில அளவில் இத்திட்டத்தினை செயல்படுத்தும் முகமையான தொழில் வணிக ஆணையரகம், இத்திட்டத்தின்

முன்னேற்றத்தை சீரான கால இடைவெளியில் ஆய்வு செய்து கண்காணித்து வருகிறது.

இத்திட்டத்தினை, வெற்றியுடன் செயல்படுத்தும் நோக்குடன் **29.10.2012** நாளிட்ட அரசாணை (நிலை) எண். **49** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (டி**2**) துறை இன் படி, அதன் வழிகாட்டும் முறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து **31.3.2018** வரை மொத்தம் **2,868** பயனாளிகள் வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக(TIIC), கிளைகள் மூலம் **300.04** கோடி அரசு மானியத்துடன் கூடிய ரூ.**1,927** கோடி திட்ட மதிப்பீட்டில் கடனுதவி பெற்றுள்ளனர். அரசு, இந்த பயனாளிகள் தங்கள் நிறுவனங்களை தொடங்கும் நோக்கில் முதலீட்டு மானியமாக ரூ.246.59 கோடியும், **3** விழுக்காடு பின் முனை வட்டி மானியமாக ரூ.15.82 கோடியும் வழங்கியுள்ளது.**(இணைப்பு 2.7)**

## 2.5 தொழில் நுட்ப மேம்பாட்டுக்கான திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக கீழ்கண்ட திட்டங்கள் வாயிலாக அரசு உதவி வழங்கி வருகிறது.

- உரிமைக்காப்பு (கண்டறிதல் உரிமை) பதிவு விண்ணப்பத்திற்கான தொகையில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 50 விழுக்காடு, அதிக பட்சமாக ரூ.2 இலட்சம் மானியம்.

- வர்த்தக குறியீடு பதிவு தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.25,000/– இதில் எது குறைவானதோ.

- அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் மூலம் தொழில் குழுமங்கள் மற்றும் சிறு கருவி மையங்கள் அமைப்பதற்கு, அவற்றின் திட்டமதிப்பீட்டில் 25 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை மானிய உதவி.

- தூய்மையான மின் திறனுள்ள தகவல் தொழில்நுட்பம் சார்புடைய தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.

- திறன்மிகு மையங்கள் மற்றும் தொழில்நுட்ப வணிக சேவை வளர்ப்பகங்களை உருவாக்கி அதன் மூலம் நவீன உற்பத்தி உத்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு மேற்கொள்ள, ஒவ்வொரு தொழில்நுட்ப வணிக சேவை வளர்ப்பகம் / நேர்த்திமிகு மையத்திற்கும் ரூ.50 இலட்சம் வரை மானிய உதவி.

## 2.6 பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (Prime Minister's Employment Generation Programme (PMEGP))

மைய அரசு, புதிய குறுந்தொழில்களை உருவாக்க பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் **(PMEGP)** எனும் திட்டத்தை 2008–09 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்சமாக ரூ.25 இலட்சமும், சேவை தொழில்களுக்காக ரூ.10 இலட்சமும் திட்ட மதிப்பீடாக இருக்க வேண்டும்.

திட்ட மதிப்பீட்டில் தனது பங்களிப்பாக பொது பிரிவில் 10 விழுக்காடும், சிறப்பு பிரிவினர் (பட்டியலிடப்பட்ட இன / பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மை இனத்தினர், மகளிர் / முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், வடகிழக்கு பகுதியினர் மலை மற்றும் எல்லைப் பகுதியினர்) 5 விழுக்காடும் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகை, காலக் கடனாக வங்கிகள் வழங்கும். இத்திட்டத்தின் கீழ் பயனடையவிரும்பும் பயனாளிகள் www.kviconline.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். மைய அரசு பயனாளிகளுக்கு கீழ்கண்ட சதவிகிதத்தில் மானியங்களை வழங்குகிறது.

| பிரிவு | நகர்புறம் | கிராமப்புறம் |
|---|---|---|
| பொதுப்பிரிவு | திட்ட மதிப்பீட்டில் 15% | திட்ட மதிப்பீட்டில் 25% |
| சிறப்புப் பிரிவு | திட்ட மதிப்பீட்டில் 25% | திட்ட மதிப்பீட்டில் 35% |

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்(PMEGP) கீழ் **2011–12** முதல் **2017–18** வரை, **9,692** பயனாளிகளுக்கு **ரூ.20,650.45** இலட்சம் **விளிம்புத் தொகை** மானியமாக வழங்கப்பட்டுள்ளது. **2017–18**இல் **2,039** பயனாளிகளுக்கு **ரூ.4,609.96** இலட்சம் **விளிம்புத் தொகை** மானியமாக வழங்கப்பட்டுள்ளது **(இணைப்பு 2.6).**

## 2.7 சந்தை வாய்ப்பு உதவி

அரசு குறு மற்றும் சிறுதொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு கீழ்கண்ட சந்தை வாய்ப்பு உதவிகளை விரிவாக்கம் செய்துள்ளது.

- ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்வதற்கு வழங்கப்படும் முன்வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்

- இம்மாநிலத்திலும் மற்ற மாநிலங்களிலும் நடைபெறும் பொருட்காட்சிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சார்புடைய சங்கங்கள் கலந்து கொள்ளும் நேர்வுகளில் அரங்க வாடகையில் **50** விழுக்காடு மானியமாக வழங்குதல்,
- பொதுவான பெயர் அல்லது பொது வணிக சின்னத்தில் விற்பனை செய்ய ஆதரவு அளித்தல்.
- உள்நாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் மற்றும் சேவைகளை குறைந்தபட்சம் **25** விழுக்காட்டை அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

## 2.8 நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புனரமைத்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் காணப்படும் நிதி சிரமங்களை எதிர்நோக்கவும் மற்றும் அந்நிறுவனங்களை மேம்படுத்தி வளர்ச்சியடைய செய்யும் வகையில் எளிதான மற்றும் விரைவான வழிவகைகளை உண்டாக்கும் நோக்கில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புனரமைக்க மற்றும் மறுசீரமைப்புக்கான

கட்டமைப்பை இந்திய அரசின் அரசிதழின் மூலம் 29.5.2015–அன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இருப்பினும், மத்திய ரிசர்வ் வங்கியானது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் அமைச்சகத்துடன் கலந்து ஆலோசித்து வங்கிகளுடன் இணக்கமான முறையில் செயல்பட தற்போதுள்ள நடைமுறை வழிகாட்டுதலிலுள்ள வருமான அங்கீகாரம், சொத்துகளை வகைப்படுத்துதல் மற்றும் கடன் வழங்குவதற்கான வழிமுறைகளை வங்கிகள் எளிதாக செயல்படுத்த மத்திய ரிசர்வ் வங்கி சில வழிவகை செய்துள்ளது. அதனடிப்படையில், வங்கிகளால் வழங்கப்படும் அதிகபட்ச கடன் தொகையான ரூ.25 கோடி வரை உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு திருத்திய புனரமைப்பு விதிளை மாற்றம் செய்து, வங்கிகள் நிதி சிரமங்களில் உள்ள நிறுவனங்களை முன்னதாக கண்டறிந்து உடன் மாற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு வழிமுறை செய்யப்பட்டுள்ளது.

## 2.9 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுவரும் நிதி உதவி

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் கடன் உதவிகள் பெற வணிக வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

ஏப்ரல் **2017** முதல் டிசம்பர் **2017** வரை ரூ. **64,740.58** கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு டிசம்பர் **2017** வரை மொத்தம் வழங்கப்பட்ட முன்பணத்தொகையில் குறுந்தொழில்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட முன்பணத்தொகை **46.57** விழுக்காடு ஆகும்.

## 2.10 மாவட்டத் தொழில் நிறுவன வளர்ச்சி ஆலோசனை குழு

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து தாங்கள் விற்பனை செய்த பொருள்களுக்கு உண்டான தொகையை கால தாமதமின்றி உடன் பெற்றுத்தர போதிய வாய்ப்புகளை உருவாக்குவது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் **2006**–ன் நோக்கங்களில் ஒன்றாகும்.

இது சம்பந்தமாக அரசு சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது.

**2017–18**–ல், **24** வசதியாக்கக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு **83** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்

நிறுவனங்களுக்கு வரவேண்டிய நிலுவைத் தொகையாக சுமார் ரூ.829.65 இலட்சம் பெற்றுத்தரப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | கு.சி.தொ.நி. வசதியாக்க குழு அமர்வுகள் | தீர்வு காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | பெறப்பட்ட நிலுவை தொகை |
|---|---|---|---|
| 2011–2012 | 15 | 38 | 233.86 |
| 2012–2013 | 35 | 115 | 396.65 |
| 2013–2014 | 18 | 62 | 556.52 |
| 2014–2015 | 27 | 45 | 233.93 |
| 2015–2016 | 09 | 12 | 78.57 |
| 2016–2017 | 28 | 99 | 1,924.49 |
| 2017–2018 | 24 | 83 | 829.65 |
| மொத்தம் | 156 | 454 | 4,253.67 |

## 2.11 சோதனை சேவைகள்

தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பரிசோதனைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிடும் பொருட்டு கீழ்கண்ட ஆய்வுக்கூடங்கள் சேவை செய்து வருகின்றன:-

(i) மத்திய மின்பொருள் சோதனை மையம், காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்

(ii) இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், கிண்டி மற்றும் மண்டல சோதனை ஆய்வுக்கூடங்கள் மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி.

**2.12 பயிற்சி நிலையங்கள்**

குறிப்பிட்ட துறையில் தொழில் நுட்ப திறன் மேம்பாட்டிற்காக பட்டயப் படிப்பினை கீழ்கண்ட பயிற்சி நிலையங்கள் வழங்கி வருகின்றன.

**2.12.1 அரசினர் தொழில் நுட்ப பயிலகம், கிண்டி, சென்னை**

1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கிண்டி, அரசினர் தொழில் நுட்ப பயிலகம் பொறியியல் கல்வியில் மூன்று ஆண்டு பட்டயப்படிப்புகளை கீழ்க்கண்ட இரண்டு துறையில் வழங்கி வருகிறது. (1) டி.எம்.இ (கருவி மற்றும் அச்சு பொறியியல்) (2) டி.எம்.இ. (குளிர்சாதனம் மற்றும் காற்று பதனிடும் பொறியியல்). இப்பட்டயப்படிப்புகளை அனைத்திந்திய தொழில்நுட்ப கல்வி கழகத்தினுடைய (AICTE) அங்கீகாரத்துடன் வழங்கி வருகின்றது. ஆண்டுதோறும் 3 ஆண்டு பட்டயப்படிப்புக்கு 144 மாணவர்கள் (120 மாணவர்கள் முதலாம் ஆண்டு மற்றும் 24 மாணவர்கள் நேரடி இரண்டாம் ஆண்டு) அனுமதிக்கப்படுகின்றனர். மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்கள் அறிவிப்பின்படி, அனைத்திந்திய தொழில் நுட்ப கல்வி கழகத்தினுடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வண்ணம், கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு அரசு ஒதுக்கிய ரூ.7.02 கோடியில் கட்டிட பணி முழுமையாக முடிவடைந்து 4.3.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### 2.12.2 கருவி பொறியியல் பயிலகம், திண்டுக்கல்

1961–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திண்டுக்கல் கருவி பொறியியல் பயிலகம் பொறியியல் பட்டயப்படிப்பில் 3 ஆண்டு கருவி மற்றும் அச்சு பட்டயப்படிப்பை அனைத்திந்திய தொழில்நுட்ப கல்வி கழகத்தினுடைய அங்கீகாரத்துடன் (AICTE) வழங்கி வருகின்றது. ஆண்டுதோறும் 3 ஆண்டு பட்டயப்படிப்பிற்காக 54 மாணவர்கள் (45 மாணவர்கள் முதலாம் ஆண்டு + 9 மாணவர்கள் நேரடி இரண்டாம் ஆண்டு) அனுமதிக்கப்படுகின்றனர்.

### 2.12.3 பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், விருத்தாச்சலம்

விருத்தாச்சலத்தில் இயங்கி வரும் பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், பீங்கான் தொழில்நுட்பவியலில்

3½ ஆண்டு பட்டயப்பயிற்சி வழங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு தேறிய 50 மாணவர்கள் முதலாம் ஆண்டிலும், பன்னிரண்டாம் வகுப்பு தேறிய 10 மாணவர்கள் இரண்டாம் ஆண்டில் பிற்சேர்க்கையாகவும் இக்கல்லூாரியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்பயிற்சி நிலையம் அகில இந்திய தொழில் நுட்பக் கழகத்தின் அனுமதி பெற்று தொழில்நுட்ப இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இணைந்து இயங்கி வருகிறது.

### 2.12.4 அரசினர் அறிவியல் கண்ணாடிப் பயிற்சி மையம், கோயம்புத்தூர்

கோயம்புத்தூரில் இயங்கி வரும் அறிவியல் கண்ணாடிக் கருவிகள் பயிற்சி மையம், 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பதில் ஓராண்டு செய்முறை மற்றும் இரண்டு மாத குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சியும் வழங்கி வருகிறது.

## 2.13 அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்

1972ஆம் ஆண்டு முதல் அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம் கோயம்புத்தூரில் இயங்கி வருகிறது. இந்த நிறுவனம் சுகாதாரத் துறை, தடய

அறிவியல் துறை மற்றும் வேளாண்மைத் துறை ஆய்வகங்களுக்கு தேவையான ஆய்வக கண்ணாடி பொருட்கள் தயாரித்து வருகிறது.

## 2.14 அரசு தொழிற்பேட்டைகள்

### 2.14.1 அரசினர் பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாச்சலம்

விருத்தாச்சலம் அரசினர் பீங்கான் தொழிற்பேட்டை குறிப்பாக பீங்கான் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்டது. இந்த தொழிற்பேட்டையில் 64 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தொழிற்பேட்டையில் இயங்கி வரும் பீங்கான் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பீங்கான் பொம்மைகள், அகல் விளக்கு, இன்சுலேட்டர்கள், உயர் வெப்பம் தாங்கக் கூடிய தொழிலக பொருட்களை தயாரிக்கின்றன.

### 2.14.2 மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்

மின் மற்றும் மின்னணு தொழில்களுக்கு மாநில அரசால் 517 மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் 140 தொழிற் கூடங்களுடன் கூடிய எட்டு தொழிற்பேட்டைகள்

ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இத்தொழிற்பேட்டைகள் திருவான்மியூர் (சென்னை மாவட்டம்), பெருங்குடி (காஞ்சிபுரம் மாவட்டம்), காக்களூர் (திருவள்ளூர் மாவட்டம்), கப்பலூர் (மதுரை மாவட்டம்), சூரமங்கலம், (சேலம் மாவட்டம்), காளப்பட்டி (கோயம்புத்தூர் மாவட்டம்), ஒசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் துவாக்குடி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

## 2.15 தொழில் முனைவோர் மற்றும் வங்கிகளுக்கான விருதுகள்

தமிழக அரசு, சிறந்த தொழில் முனைவோர்களுக்கான மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, கடன் வழங்குவதில் சிறப்பாக செயல்படும் வங்கிகளுக்கு விருதுகள், கீழ்கண்ட இனங்களில் வழங்கப்பட்டு வருகின்றது:

1. சிறந்த தொழில் முனைவோருக்கான மாநில விருது, ரொக்கம் ரூ.50,000/– மற்றும் ரூ.15,000/– மதிப்பிலான நினைவுப்பரிசு
2. சிறந்த தொழில் முனைவோருக்கான வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கான மாநில விருது, ரொக்கம்

ரூ.50,000/– மற்றும் ரூ.15,000/– மதிப்பிலான நினைவுப்பரிசு

3. சிறந்த தொழில் முனைவோருக்கான உற்பத்திப் பொருளின் தரம் மற்றும் ஏற்றுமதிக்கான மாநில விருது, ரொக்கம் ரூ.50,000/– மற்றும் ரூ.15,000/– மதிப்பிலான நினைவுப்பரிசு

4. சிறந்த மகளிர் தொழில் முனைவோருக்கான மாநில விருது, ரொக்கம் ரூ.50,000/– மற்றும் ரூ.15,000/– மதிப்பிலான நினைவுப்பரிசு

5. சிறந்த தொழில் முனைவோருக்கான மாவட்ட அளவிலான விருது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.15,000/– மதிப்பிலான நினைவுப்பரிசு மட்டும்

**முன்னோடி வங்கிகளுக்கான முதலமைச்சர் விருது**

| | |
|---|---|
| முதல் பரிசு (நினைவுப்பரிசு) | ரூ.30,000/– |
| இரண்டாம் பரிசு (நினைவுப்பரிசு) | ரூ.20,000/– |
| மூன்றாம் பரிசு (நினைவுப்பரிசு) | ரூ.15,000/– |

## 2.16 உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015

**2015–**ம் ஆண்டு செப்டம்பர் மாதம் **9** மற்றும் **10** ஆம் தேதிகளில் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடந்த உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டில் **10,073** குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூலம் ரூ.**16,532.67** கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. தொழில் முனைவோர்களுக்கு அரசு மூலம் கடனுதவி பெற சம்பந்தப்பட்ட துறை மூலமாக சட்ட பூர்வமான அனுமதி பெறவும், தகுதியான ஊக்கத்தொகை பெற்றுத் தரவும் உறுதி வழங்கப்பட்டது. அதன்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சட்ட பூர்வமான அனுமதிகள், தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டத்தின்படி உரிய கால கெடுவிற்குள் அளித்திட அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

**31.3.2018,** அன்றைய தேதியில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட **5,358** நிறுவனங்கள் ரூ.**6,182.03** கோடி முதலீட்டில் உற்பத்தி தொடங்கி **71,691** நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளன.

## 2.17 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

மாநிலத்தில் சிறு மற்றும் குடிசைத் தொழில்களை மேம்படுத்துவதில் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்

சிறப்பானதொரு இடத்தை வகிக்கின்றன. இச்சங்கங்கள் ஊரகப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. தற்பொழுது இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஊரகக் கைவினைஞர்கள், திறனாளிகள் மற்றும் திறனற்ற (unskilled) தொழிலாளர்களுக்கு பயனுள்ள வேலைவாய்ப்பினை வழங்கி வருகின்றன. மேலும், இச்சங்கங்கள் சிறு தேயிலை விவசாயிகள் மற்றும் மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவோர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு வழிவகை செய்கின்றன. தவிர, இச்சங்கங்கள் குறு மற்றும் சிறு தொழில்களை மேம்படுத்துவதோடு அல்லாமல், தொழில் முனைவோர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் தொழிற் கூடங்களை கூட்டுறவு தொழிற்பேட்டைகள் அமைப்பதன் மூலம் வழங்குகின்றன. தொழிற் கூட்டுறவு பிரிவில் இன்ட்கோசர்வ், சேகோசர்வ், டீசர்வ் போன்ற சங்கங்கள் மிக முக்கியமானவைகளாகும். இக்கூட்டுறவு சங்கங்களுக்கு போதுமான நிதி வசதி தொடர்புகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கென்று தனியான ஒரு நிதி நிறுவனமாக தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (TAICO Bank) உருவாக்கப்பட்டது.

## 2.18 இன்ட்கோசர்வ்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகளின் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் நோக்கத்தில், இண்ட்கோசர்வ் என்று பரவலாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதேயிலை விவசாயிகளின் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இணையம் **1965–**இல் உருவாக்கப்பட்டது**.** இச்சங்கத்தின், முக்கிய குறிக்கோள் உறுப்பினர் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும் தேயிலைத்தூளை சந்தைப்படுத்தி, அதன் மூலம் அதிக விலை பெற்றுத் தருவதே ஆகும்**.** மேலும், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு தேவையான இடுபொருள்களை கொள்முதல் செய்து வழங்குவதோடு அல்லாமல், குன்னூர், கோயமுத்தூர் மற்றும் கொச்சி ஆகிய இடங்களில் சேமிப்பு கிடங்கு வசதிகளையும் வழங்கி வருகிறது**.** தவிர, ஊட்டி டீ தேயிலை தூளை விற்பனை செய்வதோடு அல்லாமல் இண்ட்கோசர்வானது சந்தையில் தனது பெயரில் தேயிலைத்தூளை பாக்கெட்டுகளின் மூலம் விற்பனை செய்து வருகிறது**.**

தற்போது **16** தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் **26,622** உறுப்பினர்களுடன் நீலகிரி

மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. இத்தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தி திறன் ஆண்டுக்கு சுமார் 224 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் ஆகும். இந்த உற்பத்தி அளவு மாநிலத்தின் மொத்த தேயிலைத்தூள் உற்பத்தியில் 17 விழுக்காடாகும்.

தேயிலை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும்பாலும் 1950 முதல் 1980 வரை தொடங்கப்பட்டவையாகும். மேலும், மேம்படுத்தப்பட்ட தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, புதிய தேயிலை தொழிற் கூட்டுறவு தொழிற்சாலை நஞ்சநாடு பகுதியில் ரூ.5 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவ ஆணை வழங்கப்பட்டது. அதில், நபார்டு தனது பங்காக ரூ.2.50 கோடியை நிதியுதவியாக வழங்கியது. மேலும், அரசானது இத்திட்டத்தின் கீழ் தனது பங்காக ரூ.2 கோடியை வழங்கியது. இத் தொழிற்சாலை தனது உற்பத்தியை 30.12.2017இல் தொடங்கியது.

### 2.19 விலை நிலைநிறுத்தல் நிதியம் ஏற்படுத்துதல்

தேயிலை சந்தையில் ஏற்படும் பெரும் விலை சரிவினால் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டு, அவைகள் மாதந்தோறும் மிகப் பெரிய நட்டம் ஏற்படுகின்ற சூழ்நிலைகளுக்கு தள்ளப்பட்டு, அதன்

காரணமாக தங்களின் உறுப்பினர்களான சிறு தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு உரிய விலையினை வழங்க இயலாத சூழ்நிலை அவ்வப்பொழுது ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் சிக்கல்களுக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, அரசானது ரூ.12 கோடி மதிப்பீட்டில் விலை நிலைநிறுத்தும் நிதியத்தினை அமைத்து, அதில் தனது பங்காக ரூ.8.00 கோடியை 2014–15ஆம் ஆண்டுக்கான ஒரே தவணையில் தொடராச் செலவினமாகவும், மீதி ரூ.4 கோடியை இண்ட்கோசர்வ் தனது பங்காகவும் வழங்கியுள்ளன. இத்திட்டம், இண்ட்கோசர்வ் சங்கத்தின் நிதி உதவியுடன், 2015–16 ஆம் ஆண்டும் செயல்படுத்தப்பட்டது. தற்பொழுது வரை ரூ.20.06 கோடி சுமார் 18,000 தேயிலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

தேயிலைத் தொழிலில், சிறுதேயிலை உற்பத்தியாளர்களுக்கு உதவும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 2017–18ஆம் ஆண்டிற்கு, தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.2 வீதம் ஆதார விலையாக வழங்க ரூ.8.00 கோடியை மானியமாக

அரசு வழங்கியுள்ளது. மீதமுள்ள ரூ.4.00 கோடியை இன்கோசர்வ் வழங்கும்.

## 2.20 டீசர்வ்

'டீசர்வ்' என்று பரவலாக அழைக்கப்படும் தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கமானது, குன்னூரில் அமைக்கபட்ட நாட்டின் முதல் மின்னணு தேயிலை ஏல மையமாகும். இச்சங்கம் 2002–ல் பதிவு செய்யப்பட்டு, 2003 முதல் செயல்படத் துவங்கியது. தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள், எஸ்டேட் தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் டான்டீ ஆகியோர் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். தேயிலை ஏல முறையில் நியாயமான, வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை முக்கிய நோக்கமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் மூலம் உற்பத்தியாளர்களின் தேயிலைத் தூளுக்கு அதிக விலை கிடைக்க செய்வதுடன், அதன் மூலம் சிறு தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கவும் வழிவகை செய்கிறது.

## 2.21 சேகோசர்வ்

'சேகோசர்வ்' என்று பொதுவாக அனைவராலும் அழைக்கப்படும் சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி

உற்பத்தியாளர்கள் சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் மரவள்ளி கிழங்கு உற்பத்தி செய்யும் மாவட்டங்களிலுள்ள சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கச் செய்வதற்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் **1981**–ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இச்சங்கம் துவங்கப்படுத்துவதற்கு முன்பு, சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு உற்பத்தியாளர்கள் குறிப்பாக சிறு தொழில் நிறுவனங்கள், அமைப்பு சார்ந்த சந்தை வாய்ப்பு இல்லாததினால், வியாபார இடைத்தரகர்களின் சுரண்டல் சூழ்நிலையின் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டனர். உற்பத்தியாளர்களின் இவ்வாறான துயரினை போக்கவும், அவர்களது உற்பத்தி பொருட்களுக்கு சந்தை வசதியை ஏற்படுத்தி கொடுப்பதற்காகவும் நிறுவப்பட்ட சேகோசர்வ் சங்கமானது, தனது உறுப்பினர்களுக்கு நிதி உதவி மற்றும் சேமிப்பு கிடங்கு வசதிகளையும் வழங்கி வருகிறது.

இச்சங்கமானது தனது பரிசோதனைக் கூட வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சவ்வரிசிக் குழுமம் ஒன்று மத்திய அரசின் நிதியுதவி மூலமாக பகுப்பாய்வு கூடம் ஒன்றை பொது வசதி மையமாக

ஏற்படுத்தியுள்ளது. மேலும், இச்சங்கங்களின் வளர்ச்சியை மேம்படுத்தவும், உலகளவில் சந்தைப்படுத்தவும் மற்றும் மின்னனு ஏலத்தை வெளிப்படையாக நடத்தும் பொருட்டு மின்னனு ஏல மையம் சேகோசர்வில் தொடங்க உத்சேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி, மின்னனு ஏல மையம் முழுவதுமாக கணினி மையமாக்கப்பட்ட பின் இடைத்தரகர்களின் தலையீடு முற்றிலுமாக தவிர்க்கப்படும். இத்தகைய மின்னனு ஏல மையத்தின் முக்கிய நோக்கம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி விற்பனையில் வெளிப்படை தன்மையை ஏற்படுத்துவதாகும்.

## 2.22 தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி)

**1960–**ம் ஆண்டுகளில், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய அன்றாட வியாபார நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியுதவி பெறுவதில் கூட பெரும் சிரமங்களை சந்தித்து வந்தன. தொழிற் கூட்டுறவு சங்கங்கள் சந்தித்து வந்த மேற்கண்ட இடர்பாடுகளை நீக்கும் பொருட்டும், அச்சங்கங்களுக்கு நிதி வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் பொருட்டும், தாய்கோ வங்கி என்று பெருமையுடன் அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியானது **1961–**ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில்

இத்துறையின் கீழ் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதை மட்டுமே குறிக்கோளாக கொண்டு இவ்வங்கி துவங்கப்பட்டது. ஆனால், நாளடைவில் இவ்வங்கியானது தமது சேவைகளை அனைத்து பிரிவினருக்கும் விரிவு செய்துள்ளது. தற்போது தாய்கோ வங்கியானது தனிநபர்களுக்கும் பல்வேறு கடன் வசதிகளை வழங்கி வருகிறது. மேலும் இவ்வங்கி, பொது மக்களிடமிருந்து வைப்புத் தொகைகளைப் பெற்றும், அவர்களுக்கென சேமிப்பு மற்றும் வியாபார கணக்கு வசதிகளை வழங்கியும் வருகிறது. இவ்வங்கியானது மாநிலத்தில் அரசுத் துறைகளின் கடன் வழங்கும் திட்டங்களை செயல்படுத்துவதிலும் பங்கேற்று வருகிறது.

இவ்வங்கியானது, **2015–16**இல் சாத்தூர் மற்றும் அம்பத்தூர் கிளைகளுக்கென சொந்த கட்டிடங்கள் கட்டி, அவற்றில் கிளைகளை நடத்தி வருகின்றது. மேலும் **2017–18**இல் **3** புதிய கிளைகள் தாம்பரம், கோயம்பத்தூர் மற்றும் மதுரையில் துவங்க உத்தேசிக்கப்பட்டு தாம்பரம் மற்றும் கோயம்புத்தூர் கிளைகள் இயங்கி வருகின்றன. மதுரை கிளையின் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் துவங்கப்படும்

நிலையில் உள்ளது. ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தலின்படி தாய்கோ வங்கியின் அனைத்து கிளைகளும் கணினிமயமாக்கப்பட்டு மைய வங்கியியல் தீர்வு (CBS) முறை வெற்றிகரமாக 45 கிளைகளிலும் செயல்படுத்தியது.

## 2.23 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கமானது கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குகிறது. இவ்வகையான தொழிற் கூட்டுறவு சங்கங்கள் கயிறு பின்னுதல், பாய் மற்றும் பாய் சார்ந்த பொருட்களை உருவாக்குவதில் முதன்மையாக ஈடுபட்டுள்ளன. தற்பொழுது இத்துறையின்கீழ் 65 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் 10,896–க்கும் மேற்பட்ட தொழிலாளர் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது. இதில் 80 விழுக்காடு மகளிர்களாகும். மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு கயிறு விற்பனை இணையம் என்று அழைக்கப்படும் “டான்கோபெட்” என்ற கயிறு விற்பனை இணையம், சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

கயிறு மற்றும் கயிறு சார்ந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மற்றும் இதர சட்டப்பூர்வ பயன்களை பெறச்செய்து, அதன் மூலம் கயிறு பொருட்களின் உற்பத்தியினை ஊக்குவித்து, பெருமளவில் வேலைவாய்ப்பினை அளிக்கும் பொருட்டு சந்தை மேம்பாட்டு நிதி உதவி என்ற திட்டம் கயிறு வாரியம் மூலம் 2000–01 ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் கடந்த 3 ஆண்டு கால சராசரி விற்பனையில், 10 விழுக்காடு சந்தை மேம்பாட்டு நிதியாக வழங்கப்பட்டுவருகிறது. இந்நிதியானது, மத்திய, மாநில அரசுகளால் சமமாக பகிர்ந்து வழங்கப்படுகிறது. 2017–18–ம் ஆண்டில் தமிழக அரசு தனது முதல் தவணையாக 64 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.58.22 இலட்சம் வழங்கியுள்ளது.

## 2.24 இதர தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தொடர்ச்சியான வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டு, செங்கல் உற்பத்தி, பாலித்தீன் பை தயாரித்தல், ஆட்டோ சேவை, அச்சக உற்பத்தியாளர்கள் சேவை, ஒப்பந்தத் தொழிலாளர் சேவை, கைவினைத்தொழில், தையல் தொழில், பொறியியல் ஆகிய பிற பிரிவுகளிலும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையால் துவங்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் மூலம், நலிந்த பிரிவினை சார்ந்த தொழிலாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாறான தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதன் மூலம், திறன் மற்றும் பகுதி திறன் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியான மற்றும் நிலையான வேலைவாய்ப்புகள் கிடைப்பதோடு அல்லாமல், சட்ட ரீதியான பலன்களை பெறவும் வழிவகை செய்யப்படுகிறது.

## 2.25 பாரம்பரிய தொழில்களை புத்துயிர் ஊட்டும் நிதியுதவி வழங்கும் திட்டம் (SFURTI)

கயிறு தொழில் உட்பட பாரம்பரிய மிக்க தொழில்களின் உற்பத்தி திறனையும், அதன் சந்தை வாய்ப்பினையும் அதிகரித்து இதர தொழில்களுடன் போட்டியிடும்

செயல்பாட்டினை ஊக்குவித்து அதன் மூலம் அவ்வகையான தொழில்களை வளர்ச்சி அடையச் செய்யும் பொருட்டு, மத்திய அரசானது பாரம்பரிய தொழில்களை புத்துயிர் ஊட்டும் நிதியுதவி வழங்கும் திட்டத்தினை (ஸ்பூருட்டி) உருவாக்கியது. இத்திட்டத்தின் கீழ் புதிய உபகரணங்களை புகுத்துதல், பொது வசதி மையங்கள் அமைத்தல், திறன் வளர்த்தல், வடிவமைத்தல், சிப்பமிடுதல், சந்தை வாய்ப்பினை மேம்படுத்தல் மற்றும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற சேவைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 12–வது ஐந்தாண்டு திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் ஸ்பூருட்டி திட்டத்தின் கீழ் 9 கயிறு குழுமங்கள் தருமபுரி, மதுரை, திருப்பூர் (காங்கேயம் மற்றும் பல்லடம்), கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், நாகர்கோயில் மற்றும் திண்டுக்கல் ஆகிய 8 மாவட்டங்களில் ரூ. 37.79 கோடி மதிப்பீட்டில் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில், கட்டட பணிகள் முடிவுற்று, இயந்திரங்கள் நிர்மாணிக்கப்பட்டு, காங்கேயம் மற்றும் பல்லடத்தில் திறக்கப்பட்டது. மீதமுள்ள 6 கயிறு குழுமங்கள் திறக்கப்பட தயார்நிலையில் உள்ளன.

மேலும், அரசு கயிறு பொருள்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு 3 கயிறு குழுமங்கள் ‘‘கயிறு

குழுமங்களை மேம்படுத்துதல்'' திட்டத்தின் கீழ் தமிழகத்தில் கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ரூ.22.00 கோடி செலவில் அமைத்திட ஒப்புதல் வழங்கியுள்ளதோடு, அக்குழுமங்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.6.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்கியுள்ளது.

## 2.26 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மூலமாக வேலைவாய்ப்பு உருவாக்கம்

12–ஆவது திட்ட காலத்தில் (2012–2017) சுமார் 15 இலட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்ட காலத்தில் வேலைவாய்ப்பு உருவாக்கம் பின் வருமாறு:-

| வருடம் | வேலை வாய்ப்பு உருவாக்கம் |
|---|---|
| 2012–13 | 3,38,435 |
| 2013–14 | 3,43,665 |
| 2014–15 | 3,52,152 |
| 2015–16 | 2,32,476 |
| 2016–17 | 6,15,482 |
| 2017–18 | 42,4887 |
| **மொத்தம்** | **23,07,097** |

## 2.27 அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டம்

அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டமானது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் தேவைப்படும் மனித ஆற்றலை வழங்கிடும் வகையிலும் வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 30 சதவீதம் மகளீருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் பயிற்சி காலத்தில் குறைந்தபட்சம் மாதம் ரூ.5,000/– ஆயிரம் உதவித்தொகையாக 6 மாதம் வழங்கப்படுகிறது. இதில் தமிழக அரசு மாதம் ரூ. 2,000/– குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு மானியமாக பயிற்சி முடித்த பிறகு வழங்கப்படுகிறது. இப்பயிற்சிக்கு பிறகு பயிற்சி பெற்றவர்களின் திறமை அறியப்பட்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இத்திட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் தேவைப்படும் மனித ஆற்றலை வழங்கிடும் வகையிலும் தேவைப்படும் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயனாளிகள் NSDC/ NSDA sector skill council / MES ஆகிய அமைப்புகளில் ஏதேனும் ஒன்றின் தகுதியினை பூர்த்தி செய்திருக்க

வேண்டும். வயது வரம்பு **18** முதல் **45** வயதிற்குட்பட்டு இருத்தல் வேண்டும், இத்திட்டத்திற்கு நிதியுதவி தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் மாநில அரசு வழங்குகிறது. **2017–18** ஆம் ஆண்டில் **13,365** பயனாளிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

பயிற்சி உதவித் தொகை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் கூட்டு ஆய்விற்குப்பின் பயிற்சி முடித்தவுடன் அளிக்கப்படும். கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் தேவைப்படும் மனித ஆற்றல் மற்றும் வேலை வாய்ப்பினை உருவாக்கிடும் வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது.

## 3. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO)

### 3.1 சிட்கோ நிறுவனத்தின் முக்கிய நோக்கம்

சிட்கோ நிறுவனம் தமிழக அரசால் 1970 ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை வழிநடத்தவும், ஆலோசனை வழங்கவும், நிதியுதவி, பாதுகாப்பு மற்றும் அவற்றின் நலன்களை மேம்படுத்தவும், அவைகளுக்கு மூலதனம், கடன்வசதி, வழிமுறைகள், ஆதாரங்கள், தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகத்திறன் போன்றவைகளை பெறுவதற்கு உதவிடவும், அவற்றின் உற்பத்தி முறைகள், உற்பத்தி நுட்பங்கள், மேலாண்மை நுட்பங்கள் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவைகளை வளர்ப்பதற்கு உதவிடவும் நிறுவப்பட்டது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சி மற்றும் தரமான உட்கட்டமைப்பு வசதி ஆகியவற்றை அதிகப்படியாக வழங்குவதை மையப்படுத்தியே சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடுகள் அமைந்துள்ளன. இவை தவிர சிட்கோ நிறுவனம் விற்பனை உதவி மற்றும் மூலப் பொருட்கள் வழங்குதல் முதலியசேவைகளையும் வழங்குகிறது.

இந்த நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூ.24.70 கோடி. 2017–18 ஆம் நிதியாண்டில், ரூ.8.89 கோடி இலாபம் ஈட்டி அரசுக்கு ரூ.2.47 கோடி ஈவுத்தொகை வழங்கியுள்ளது.

## 3.2 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தொழிற்பேட்டைகளை உருவாக்கியும் அவற்றை நிர்வகித்தும் வருகிறது. 31.3.2018 வரை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 7,760 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள், மற்றும் 4,510 தொழிற்கூடங்கள் உள்ளடக்கிய 113 தொழிற்பேட்டைகளை உருவாக்கியுள்ளது.

தொழிற்பேட்டைகளின் விவரங்கள் **இணைப்பு–3.1** இல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.2.1 சிட்கோ நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ள அரசு தொழிற்பேட்டைகள்

தமிழக அரசு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்காக தொழிற்பேட்டைகளை உருவாக்கு–வதில் முன்னோடியாகத் திகழ்கிறது. 1958–லிருந்து 1974 வரை 4,230 ஏக்கர் நிலப்பரப்பில் 35 தொழிற்பேட்டைகள், தொழில்

வணிக ஆணையரகத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் முதல் தொழிற்பேட்டை, 1958ஆம் ஆண்டில், 404.08 ஏக்கர் நிலப்பரப்பில் கிண்டியில் நிறுவப்பட்டுள்ளது. 1963ஆம் ஆண்டு 1,167 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழிற்பேட்டை அம்பத்தூரில் நிறுவப்பட்டுள்ளது. 1974ஆம் ஆண்டு தொழில் வணிக ஆணையரகத்தின் கட்டுப்பாட்டிலிருந்த 35 தொழிற்பேட்டைகளை சிட்கோ நிறுவனத்திற்கு அரசு மாறுதல் செய்து கொடுத்துள்ளது. 1.6.1974 முதல் இந்த தொழிற்பேட்டைகளை சிட்கோ நிர்வகித்து வருகின்றது. இந்த 35 தொழிற்பேட்டைகளின் விபரங்கள் **இணைப்பு–3.2** இல் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.2.2 சிட்கோ தொழிற்பேட்டைகள்

தொழிற்பேட்டைகளை உருவாக்குவது, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஒரு முக்கியமான செயல்பாடாகும். தொழிற்பேட்டைகளுக்கான அரசு நிலங்கள், அரசிடமிருந்து நில உரிமை மாற்றம் மூலமாகவும் மற்றும் தனியார் நிலங்கள் நில உரிமையாளரிடமிருந்து நேரடியாகவும் பெறப்படுகிறது.

### 3.2.2.1 2010ஆம் ஆண்டு வரை சிட்கோ நிறுவனத்தால் நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகள்

சிட்கோ நிறுவனம் **2010**ஆம் ஆண்டு வரை **2,332.67** ஏக்கர் நிலப்பரப்பில் **54** தொழிற்பேட்டைகளை நிறுவியுள்ளது. இத்தொழிற்பேட்டைகளில் **5,207** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செயல்படுகின்றன. **90,000** நபர்கள், வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

### 3.2.2.2 2011-18 வரை நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகள்

**2011–2018** காலத்தில் அறிவிக்கப்பட்ட **34** புதிய தொழிற்பேட்டைகளில், **18** தொழிற்பேட்டைகள் நிறுவப் பட்டுள்ளவை. இதன் விபரங்கள் **இணைப்பு–3.3**இல் கொடுக்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள **16** தொழிற்பேட்டைகளுக்கு தகுதியான நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு தொழிற்பேட்டை உருவாக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்றுவருகின்றன.

### 3.2.2.3 மகளிர் தொழிற் பூங்காக்கள்

**2017**ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட **78** தொழிற்பேட்டைகளில், **5** தொழிற்பேட்டைகள்

மகளிருக்கான தொழிற்பூங்காக்களாகும். இத்தொழிற் பூங்காக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், 2001ஆம் ஆண்டு அறிவிப்பின்படி மகளிர் முன்னேற்றத்திற்காக உருவாக்கப்பட்டன. இந்த 5 மகளிருக்கான தொழிற் பூங்காக்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | மகளிர்தொழிற்பூங்காவின் பெயர் | தொடங்கப்பட்ட ஆண்டு | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | திருமுல்லைவாயில், திருவள்ளூர் மாவட்டம் | 2001 | 246.07 |
| 2 | திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் | 2002 | 11.48 |
| 3 | வாழவந்தான்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 2003 | 51.70 |
| 4 | கருப்பூர்,சேலம் மாவட்டம் | 2004 | 51.24 |
| 5 | கப்பலூர், மதுரை மாவட்டம் | 2008 | 18.87 |
| | **மொத்தம்** | | **379.36** |

### 3.2.3 குடியிருப்பு பகுதிகளில் இயங்கிவரும் தொழிற் கூடங்களை நகருக்கு வெளியே மாற்றி அமைத்தல்

நகர்புற குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்கூடங்கள் அப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பல்வேறு மாசுகளை ஏற்படுத்துகின்றன. நகர்புறத்தில் உள்ள

இட நெருக்கடி காரணமாக தொழிற் கூடங்களை விரிவுபடுத்த இயலாத சூழ்நிலை உள்ளது.

இதனை உணர்ந்து, **2013–14** ஆம் ஆண்டில் அரசின் சிறப்பு சலுகை அறிவிப்பின்படி, நகர் பகுதிகளில் ஆங்காங்கே அமைந்துள்ள தொழிற்கூடங்களை மாற்றி அமைத்து நகருக்கு வெளியே தொழிற் குழுமம் மற்றும் தொழிற்பேட்டைகளை உருவாக்க தனியார் தொழில் முனைவோர் அமைப்புகள் முன்வரும் பட்சத்தில், மின் இணைப்பு வழங்குதல், நீர் வழங்குதல், காட்சி / கருத்தரங்க கூடங்கள், விற்பனை வசதி மையங்கள் முதலிய அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் பொது வசதி மையங்களை ஏற்படுத்த அரசு மானியம் **75** விழுக்காடு என்று அளவில் அதிகபட்சமாக **15** கோடி ரூபாய் வரை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் ரூ.**1,817.00** இலட்சம் மதிப்பீட்டில் **2** திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | நிலம் ஏக்கரில் | ஒதுக்கீடு செய்யப்–பட்ட திட்ட தொகை | ஒப்புதலளிக்கப்பட்ட மானியத் தொகை | முதல் தவணையாக கொடுத்துள்ள மானியம் |
|---|---|---|---|---|---|
| 1 | தேயிலை குழுமம், மேட்டுபாளையம் | 13.45 | 600.00 | 450.00 | 112.50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | தென் மாவட்ட ஜவுளி செயல்முறைப் படுத்தும் குழுமம், விருதுநகர் | 100.46 | 1217.00 | 912.75 | 456.375 |
| **மொத்தம்** | | **113.91** | **1817.00** | **1362.75** | **568.88** |

### 3.2.4 தனியார் தொழிற்பேட்டை அமைத்தல்

தொழிற்பேட்டை அமைக்க அரசு நிலங்கள் கிடைப்பது அரிதாக உள்ளதாலும், தனியார் நிலங்களை கையகப்படுத்துதல் மிக சிக்கலாக உள்ளதாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **2013–14**ம் ஆண்டில், விதி எண் **110**ன் கீழ் சிறப்பு தொகுப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டன. அதன்படி தனியார் தொழில்முனைவோர் அமைப்புகள் புதிய தொழில் நிறுவனங்களுக்கென புதிய தொழிற்குழுமம் மற்றும் தொழிற்பேட்டைகளை நகருக்கு வெளியே அமைக்க முன்வரும் பட்சத்தில் அரசு மானியம் **50** விழுக்காடு என்ற அளவில் அதிக பட்சமாக **10** கோடி ரூபாய் வரை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் ரூ.**3,796.66** இலட்சம் மதிப்பீட்டில் **2** திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ. எ ண் | குழுமத்தின் பெயர் | நிலம் ஏக்கரில் | ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்ட தொகை | ஒப்புதலளிக் கப்பட்ட மானியத் தொகை | முதல் தவணை யாக கொடுக்கப் பட்டுள்ள மானியம் |
|---|---|---|---|---|---|
| 1 | மதுரை பொறியியல் குழுமம் | 54 | 1364.66 | 682.33 | 341.17 |
| 2 | கொடிசியா தொழிற்பூங்கா (CODISSIA), கோயம்புத்தூர் | 250 | 2432.00 | 1000.00 | 500.00 |
| **மொத்தம்** | | **304** | **3796.66** | **1682.33** | **841.17** |

## 3.2.5 கூட்டு முயற்சித் திட்டத்தின் கீழ் தொழிற்பேட்டைகள்

தனியார் தொழிற் சங்கங்களுடன் சேர்ந்து சிட்கோ 11 விழுக்காடு மூலதனப் பங்கீட்டுடன் புதிய தொழிற்பேட்டைகளை கூட்டு முயற்சியின் கீழ் உருவாக்கும் திட்டங்களை அரசு அறிவித்துள்ளது.

## 3.2.6 மத்திய அரசின் குறு சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின் (MSE-CDP) கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

மத்திய அரசு குறு சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின் (MSE-CDP) கீழ் (அ) புதிய

தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் (ஆ) நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சாலை, மின்சாரம், குடிநீர், தகவல் தொடர்பு, கழிவு நீர் வடிகால் மற்றும் இதர வசதிகளான வங்கி, மூலப்பொருள் கிடங்கு மற்றும் சந்தை மையம் அமைக்க மானியம் வழங்கி வருகிறது.

### 3.2.6.1 புதிய தொழிற்பேட்டைகள் – உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் சிட்கோ நிறுவனம் **16** புதிய தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும், **2** திட்டங்கள் முறையே (அ) பிடாநேரி (தூத்துக்குடி மாவட்டம்) ரூ. **805.00** இலட்சம் திட்ட மதிப்பீட்டிலும் (ஆ) பெரியநெசலூார் (கடலூார் மாவட்டம்) ரூ.**1,250** இலட்சம் திட்ட மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நடப்பு நிதியாண்டில் **4** திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**(ரூ. இலட்சங்களில்)**

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **திட்ட மதிப்பு** | **பங்கு** | |
|---|---|---|---|---|
| | | | **மத்திய அரசின் மானியம்** | **சிட்கோ பங்களிப்பு** |
| 1. | சிட்கோ தொழிற்பேட்டை, ஊத்தங்கரை, தருமபுரிமாவட்டம் | 496.00 | 265.00 | 231.00 |
| 2. | சிட்கோ தொழிற்பேட்டை, மரிக்குண்டு, திண்டுக்கல் மாவட்டம் | 850.00 | 369.60 | 480.40 |
| 3. | சிட்கோ தொழிற்பேட்டை, குருக்கள்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் | 650.00 | 343.20 | 306.80 |
| 4. | சிட்கோ தொழிற்பேட்டை, பெருந்துறை, ஈரோடு மாவட்டம் | 350.00 | 177.00 | 173.00 |
| | **மொத்தம்** | **2,346.00** | **1,154.80** | **1,191.20** |

### 3.2.6.2 நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ் சிட்கோ நிறுவனம், **13** நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளது. மேலும், திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தொழிற்பேட்டையில் ரூ.**378.50** இலட்சம் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள்

நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டில் 6 திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூ. இலட்சங்களில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு | பங்கு | | |
|---|---|---|---|---|---|
| | | | மத்திய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | பயனாளிளின் பங்களிப்பு |
| 1. | சிட்கோ தொழிற்பேட்டை நஞ்சை ஊத்துக்குளி | 185 | 94.80 | 47.40 | 15.80 |
| 2. | மதுரைதொழிற்பேட்டை மதுரை மாவட்டம் | 375 | 225.00 | 112.50 | 37.50 |
| 3. | திண்டுக்கல்தொழிற்பேட்டை திண்டுக்கல் மாவட்டம் | 325 | 195.00 | 97.50 | 32.50 |
| 4. | சிட்கோ தொழிற்பேட்டை ராணிப்பேட்டை, வேலூார் மாவட்டம் | 725 | 435.00 | 217.50 | 72.50 |
| 5. | சிட்கோ தொழிற்பேட்டை,ஓசூர் (புதியது) கிருஷ்ணகிரி மாவட்டம் | 238 | 142.80 | 71.40 | 23.80 |
| 6. | சிட்கோ தொழிற்பேட்டை, நாஞ்சிக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் | 180 | 108.00 | 54.00 | 18.00 |
| மொத்தம் | | **2,001** | **1,200.60** | **600.30** | **200.10** |

### 3.2.7 ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு உதவி திட்டங்கள் (JICA)

**2017–18** ஆம் ஆண்டில், ஒரே வகைப்பொருள் உற்பத்தி சார்ந்த ஒருங்கிணைந்த குறு, சிறு மற்றும் நடுத்தரக் குழுமங்கள் காஞ்சிபுரம் மற்றும் கரூர் மாவட்டம்

ஒவ்வொன்றிலும் ஜவுளி உற்பத்திக் குழுமம், தருமபுரி மாவட்டத்தில் உணவு தயாரிப்புக் குழுமம், மற்றும் இராமநாதபுர மாவட்டத்தில், கடல் உணவுக் குழுமம் என 4 இடங்களில் தொடங்குவதற்கான சிறப்பு திட்டம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகமையின் உதவியுடன் தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்பு திட்டம் இரண்டாம் கட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இச் சிறப்பு திட்டம் ரூ.88 கோடியில் 4 இடங்களில் உருவாக்கப்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**(ரூ. கோடியில்)**

| **வ. எண்** | **ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு (JICA) உதவி திட்டத்தின் பெயர்** | **ஜப்பான் நிதி** | **மாநில அரசு நிதி** | **சிட்கோ நிதி** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| 1 | தொழில் ஜவுளி உற்பத்திக்கான ஒருங்கிணைந்த தொழிற் பூங்கா, தண்டரை | 13 | 2 | 10 | 25 |
| 2. | ஜவுளி / ஆடை உற்பத்திக்கான ஒருங்கிணைந்த தொழிற்பூங்கா, புஞ்சைக்காலகுறிச்சி | 14 | 2 | 5 | 21 |
| 3. | உணவு உற்பத்திக்கான ஒருங்கிணைந்த பூங்கா, ஈச்சம்பாடி | 15 | 2 | 3 | 20 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | கடல்உணவு உற்பத்திக்கான ஒருங்கிணைந்த பூங்கா, சக்கரக்கோட்டை | 16 | 2 | 4 | 22 |
| **மொத்த திட்டத்தின் மதிப்பு ரூ. கோடியில்** | | | | | **88** |

### 3.2.8 சிட்கோ மகளிர் தொழிற்பூங்காக்களில் நேர்த்திமிகு மையம் அமைத்தல்

அரசு ஆணை எண். **3**, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (சி) துறை, நாள் **20.01.2015**–ல் ரூ.**8.45** கோடிக்கு **5** சிட்கோ மகளிர் தொழிற் பூங்காக்களில் நேர்த்திமிகு மைய கட்டிடங்கள் அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

சிட்கோ மகளிர் தொழில் பூங்காக்களில் மகளிர் தொழில் முனைவோர்கள் தங்களது தொழில் நடவடிக்கைகளை போட்டித் திறனுடன் மேற்கொள்ள, தொழில் நுட்பம், தொழில் திறன், விற்பனை உதவி ஆகிய வசதிகளை உள்ளடக்கியதாக இந்த நேர்த்திமிகு மையம் இருக்கும். இந்நேர்த்திமிகு மையங்கள் பொது காட்சியகம் மற்றும் விற்பனை மையம், பொதுக் கூட்ட அரங்கம், பொது பயிற்சி கூடம், நிர்வாக அலுவலகம், வங்கி, குழந்தைகள் காப்பகம் மற்றும் மருத்துவ மையம் போன்றவை உள்ளடங்கியதாகும்.

இந்நேர்த்திமிகு மையங்களின் அனைத்துப் பணிகளும் முடிவடைந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **13.3.2018** அன்று திறந்து வைக்கப்பட்டது.

நேர்த்திமிகு மையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **வ. எண்** | **மகளிர் தொழிற்பேட்டை** | **மதிப்பீடு (ரூபாய் கோடியில்)** |
|---|---|---|
| 1 | திருமுல்லைவாயில் | **2.29** |
| 2 | திருமுடிவாக்கம் | **2.27** |
| 3 | கருப்பூர் | **1.12** |
| 4 | வாழவந்தான்கோட்டை | **1.12** |
| 5 | கப்பலூர் | **1.12** |
| | **மொத்தம்** | **7.92** |

### 3.3 ஒதுக்கீட்டுக் கொள்கை

சிட்கோ நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்ய இருக்கும் தொழில் மனைகள் மற்றும் தொழிற் கூடங்களின் விவரங்கள் செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டும், சிட்கோவின் வலைதளத்தில் வெளியிடப்பட்டும், ஒதுக்கீடுகளில் வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்பட்டும் வருகிறது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வணிகத் துறை ஆணையரகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், வங்கிகள் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கத்தின் (டான்ஸ்டியா) பிரதிநிதி ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவால் விண்ணப்பதாரர்கள் நேர்காணல் செய்யப்பட்டு, தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். காலியான தொழில் மனைகள்/ தொழிற் கூடங்களை விட தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அதிகமாக இருந்தால் குலுக்கல் முறையில் தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

சிட்கோ நிறுவனம், தொழிற்பேட்டைகளில் உள்ள தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப 5 சென்ட் முதல் 100 சென்ட் (1.00 ஏக்கர்) மற்றும் அதற்கு மேலான அளவுள்ள தொழில்மனைகளாக உருவாக்கி, முழு கிரைய விலை விற்பனை மூலம் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளில் ஒதுக்கீடு செய்கிறது. 2017–18 ஆம் ஆண்டில் 221 தொழில்மனைகள் மற்றும் 6 தொழிற்கூடங்கள் புதிய தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

### 3.3.1 சிட்கோவின் புதிய ஒதுக்கீட்டுக் கொள்கை

சிட்கோ நிறுவனம் தொழிற்பேட்டைகளில், முழு கிரைய விலை விற்பனை மூலம் தொழில் மனைகளை ஒதுக்கீடு செய்து வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க **2013–14** முதல் உருவாக்கப்படும் புதிய தொழிற்பேட்டைகளுக்கான, புதிய ஒதுக்கீட்டுக் கொள்கை **18.11.2013**–ஆம் நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் **(சி)** துறை அரசாணை **(நிலை)** எண். **66**–ல் வெளியிடப்பட்டது. இக்கொள்கையின்படி **30** ஆண்டு கால குத்தகை அடிப்படையில் மனைகள் / தொழிற் கூடங்கள் ஒதுக்கீடு செய்யவும், **30** ஆண்டு கால முடிவில் தொழில் முனைவோருக்கு முழு கிரய விலையில் வாங்கவும் விருப்புரிமை அளிக்கப்பட்டது.

மேலும், பல்வேறு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் கோரிக்கையினை ஏற்று **2013–14** முதல் உருவாக்கப்படும் புதிய தொழிற்பேட்டைகளுக்கான ஒதுக்கீடு கொள்கை மேலும் தளர்த்தப்பட்டு அரசு ஆணை எண் **40** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் **(சி)** துறை நாள்**15.12.2016** வெளியிடப்பட்டது. இதன்படி குறு, சிறு மற்றும்

நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் விருப்பத்திற்கேற்ப மனைகள் / தொழிற் கூடங்கள் ‘‘நீண்ட கால குத்தகை அடிப்படை’’ அல்லது ‘‘முழு கிரைய விலை விற்பனை’’ முறையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

நீண்ட கால குத்தகை அடிப்படையில், தொழில்முனைவோர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட மனையின் விலையில் **60** விழுக்காடு முதலில் வழங்கவேண்டும். மீதமுள்ள **40** விழுக்காடு மனையின் விலையை, **30** ஆண்டு காலத்திற்கு வருட தவணைமுறையில் வழங்கவேண்டும். **30** ஆண்டு கால முடிவில் விற்பனை பத்திரம் எந்தவொரு கூடுதல் விலையுமில்லாமல் வழங்கப்படும்.

### 3.3.2 பல்வேறு பிரிவினருக்கு தொழில் மனைகள் / தொழிற் கூடங்கள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளித்தல்

**31.1.2009** நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (சி) துறையின் அரசாணை (நிலை) எண்.7–ன்படி புதிதாக உருவாக்கப்படும் தொழிற் பேட்டையில் விற்பனைக்கு உள்ள மொத்த நிலப் பகுதியில் **30** விழுக்காடு குறுந்தொழில்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

கீழ்கண்ட பிரிவினருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

- மகளிர் தொழில் முனைவோர் – 30%
- முன்னாள் இராணுவத்தினர் – 10%
- பட்டியல் இனத்தினர் / பழங்குடியினர் மற்றும் திருநங்கையர் – 20%

மேற்படி இனங்களில் போதுமான விண்ணப்பங்கள் பெறப்படாத பட்சத்தில் அவர்களுக்காக முன்னுரிமையில் வைக்கப்பட்ட தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் மற்ற பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**29.10.2012** நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் **49** ன்படி, புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் (NEEDS), தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி (EDP) பெற்ற முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் விண்ணப்பித்தால், சிட்கோ தொழில் மனைகள்/ தொழிற்கூடங்கள் காலியாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய முன்னுரிமையில் பரிசீலிக்கப்படும்.

## 3.4 குறு, சிறு தொழில் நிறுவனங்கள் –மத்திய அரசின் குழும வளர்ச்சி திட்டத்தின் [MSE-CDP] கீழ் பொது வசதி மையம் அமைத்தல்

குறு, சிறுதொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டமானது தொழில் நிறுவனங்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக பிராந்திய பரப்பில் தொகுப்பாக அமைந்துள்ள குழுமங்களை உருவாக்கி குறு, சிறு தொழில் நிறுவனங்களின் ஆதாரங்களை பெருக்குவதற்கும் நிதி வசதிகளைப் பெருக்குவதற்கும் மற்றும் சந்தை வாய்ப்பை பெருக்குவதற்கும் உதவி செய்கிறது.

ஒரு குழுமம் என்பது குறிப்பிட்ட பிராந்தியத்தில் அமைந்த ஒரே மாதிரியான மற்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய தொழில் நிறுவனங்களின் தொகுப்பாகும். அவை பொதுவான சந்தை, தொழில் நுட்பங்கள், தொழிலாளர் திறன் தேவைகளை பகிர்ந்து கொள்வதாகவும் ஒரே மாதிரியான பொருட்களை தயாரிப்பதாகவும் அமையும்.

குழுமங்களின் முக்கிய கூறுகள் பின் வருமாறு:

- தயாரிப்பு முறை, தரக்கட்டுப்பாடு, பரிசோதனை, சக்தியை பயன்படுத்துதல், மாசுக் கட்டுப்பாடு ஆகியவை ஒரே மாதிரியாக இருத்தல்.

- ஒரே மாதிரியான தொழில் நுட்பம் மற்றும் விற்பனை திட்டங்கள் மற்றும் அணுகுமுறைகள்
- குழும உறுப்பினர்களுடன் எளிமையான தொடர்பு முறைகள்
- பொதுவான சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கிடையே போட்டித்திறனை அதிகரிக்க மற்றும் உற்பத்தியை பெருக்குவதற்கான முக்கிய உத்தியாக குழும வளர்ச்சியை மத்திய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்டுள்ளன. தொழிலகங்களை குழுமங்களாக ஆக்குவதன் மூலம் பலதரப்பட்ட சேவைகளான வங்கி மற்றும் நிதி உதவி நிறுவனங்களின் சேவைகளை குறைந்த செலவில் பெறுவதன் மூலம் இச்சேவைகள் இக்குழுமங்களுக்கு சிக்கனமான வழியில் கிடைத்திடவும் அவை அதிக அளவில் கிடைத்திடவும் வழிவகை செய்யப்படுகிறது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், பொதுவான பிரச்சனைகளை அணுகி, குறு மற்றும் சிறு தொழில்களின் வளர்ச்சி மற்றும் நிலைப்பாடு ஆகியவற்றை ஆதரித்தல், சுயஉதவிக் குழு, கூட்டமைப்பு முதலியவற்றை ஏற்படுத்தி பொதுவான ஆதரவு அளித்தல் மற்றும் பொது வசதி

மையம் ஏற்படுத்துதல் (பரிசோதனை மையம், பயிற்சி மையம், மூலப் பொருட்கள் கிடங்கு, கழிவு நீர் சுத்திகரிப்பு, உற்பத்தி முறையை பூர்த்தி செய்தல்) ஆகியவற்றை குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் அடைய முடியும்.

குறு, சிறு தொழில் நிறுவனங்களின் குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைப்பதற்கான நிதி ஆதாரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மத்திய அரசு மானியம் | 70 சதவிகிதம்<br>(அதிக பட்ச திட்டத் தொகை ரூ.15 கோடி) |
| மாநில அரசு மானியம் | 10 சதவிகிதம்<br>(அதிக பட்ச மானியம் ரூ.1 கோடி) |
| சிறப்பு நோக்க ஊர்தி / பங்களிப்பு வங்கிக் கடன் | 20 சதவிகிதம் |

மத்திய அரசு மொத்தம் 32 திட்டங்களுக்கு மொத்த திட்ட மதிப்பீடான ரூ.162.99 கோடியில் ஒப்புதல் அளித்து அதில் மத்திய அரசின் மானியமாக ரூ.115.99 கோடி அளவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. மாநில அரசு ரூ.11.99 கோடி மானியம் அளித்துள்ளது. மேற்கூறிய 32 திட்டங்களில் 2 திட்டங்கள் சிறப்பு நோக்கு ஊர்தியினால் கைவிடப்பட்டன,

14 திட்டங்கள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு விட்டன. மீதமுள்ள 16 திட்டங்களை நிறைவேற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்குழுமங்களின் மூலமாக சுமார் 25,500 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர். இத்திட்டத்தின் கீழான 30 குழுமங்களின் விவரங்கள் இணைப்பு–3.4 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

குந்தா தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையின் பொன் விழா கொண்டாட்டத்தின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத் தேயிலை தொழிலை ஊக்குவிக்க கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில், ஒரு பொது வசதி மையத்துடன் கூடிய தேயிலைக் குழுமம் (Tea Cluster) உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். தேயிலைத்தூள் கலத்தல், தேயிலைத்தூளை பைகளில் நிரப்பும் வசதி (Packing), சேமிப்புக் கிடங்கு, பரிசோதனை மையம் மற்றும் விற்பனை மையம் ஆகியவற்றை கொண்டதாக இந்த பொது வசதி மையம் இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4.1.2014 அன்று இத்திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். டிட்கோ நிறுவனம் மூலமாக அசைடு (ASIDE) திட்டத்தின் கீழ் சேமிப்பு கிடங்கிற்கான நிதியுதவி ரூ.6.50 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென, முதல் தவணையாக ரூ.112.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. சேமிப்பு கிடங்கு முடிவுற்றவுடன், பொது வசதி மையம் துவங்கும் திட்டம், குறு, சிறு நிறுவனங்கள் குழும வளர்ச்சித்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும்.

### 3.4.1 குறுந்தொழில் குழுமம்

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 13.2.2014 அன்று நிதிநிலை அறிக்கையின்போது அரசு குறுந்தொழில் குழுமங்களை ஊக்குவிக்கும் பொருட்டு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது என்றும், அதன்படி அரசின் புதிய திட்டமாகிய பொது உற்பத்தி மையம் ஒன்றை தொடங்குவதற்கு ஆவன செய்வதுடன் மூலப்பொருள் வங்கி மற்றும் விற்பனை வசதி ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு திட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் அரசு 4 இடங்களில் குறுந்தொழில் குழுமங்களுக்கு ரூ.896 இலட்சம் மானியம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு அவற்றில் முதல் தவணையாக ரூ.448 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | தொழிற்பேட்டை | திட்ட மதிப்பு | ஒப்புதலளிக்கப்–பட்ட மானியத் தொகை | முதல் தவணை–யாக வழங்கப்–பட்ட மானியம் |
|---|---|---|---|---|
| 1 | எடீசியா ஈரோடு மாவட்டம் | 652 | 233 | 116.50 |
| 2 | காக்களூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம், திருவள்ளூர் மாவட்டம் | 464 | 233 | 116.50 |
| 3 | திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை பகுதி–I கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 260 | 180 | 90.00 |
| 4 | திருமுடிவாக்கம் அடுக்குமாடி தொழிற்வளாகம் பகுதி– II | 501 | 250 | 125.00 |
| | **மொத்தம்** | **1,877** | **896** | **448.00** |

## 3.5 ஏற்றுமதி மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் உதவி

அகில உலக அளவில் தொழில்நுட்ப வளர்ச்சி பற்றிய புரிதல் மற்றும் மாறிவரும் வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப சேவை செய்தல் ஆகியவை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களாகும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் புதிய வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றின் பெரும் பங்களிப்பு உள்ளதால் **2017–18** ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சிறப்புத் திட்டமாக, ஏற்றுமதி மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்த ஊக்குவித்தல் ஆகியவற்றுக்காக அறிவிக்கப்பட்டு அரசாணை எண்.**47** குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, நாள் **20.7.2017** மூலம் ரூபாய் **10** கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அயல்நாடுகளில் நடைபெறும் விற்பனைச் சந்தை மற்றும் காட்சியகங்களில் பங்கு பெற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் ரூ.**5** கோடியை உள்நாடு மற்றும் வெளிநாட்டில் உள்ள தொழில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய, அகில உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், உயரதிகாரிகள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அடங்கிய குழு, அகில உலக அளவில் நடைபெற்ற கீழ்கண்ட நான்கு வர்த்தக தொழிற் கண்காட்சிகளில் பங்கு பெற்றன.

1. பிரேசில் நாட்டில் உள்ள சா.பாலோவில் நகரத்தில் 2017 ஜூன் 25 முதல் 28 வரை 2017ல் நடைபெற்ற 29வது சர்வதேச மின், மின்னணு மற்றும் தானியங்கி தொழில்களுக்கான வர்த்தக தொழிற் கண்காட்சி.
2. செக் குடியரசு நாட்டில் உள்ள ப்ருனோ நகரத்தில் 2017 அக்டோபர் 9 முதல் 13 வரை நடைபெற்ற 59வது அகில உலக பொறியியல் தொழிற்காட்சி.
3. எகிப்து நாட்டின் கெய்ரோவில், 2017 நவம்பர் 16 முதல் 19 வரை நடைபெற்ற 17வது உலகளவில் இயந்திர தொழில்நுட்ப கண்காட்சி.
4. இத்தாலி நாட்டில் உள்ள மிலானோ நகரத்தில், 2018 மார்ச் மாதம் 13 முதல் 16 வரை நடைபெற்ற 41வது இயந்திர தளவாடங்கள் உள்ள தொழிற் கண்காட்சி.

அரசு மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் அதிகாரிகள் மேற்கூறிய கண்காட்சிகளில் பங்கு பெற்றதால் வெவ்வேறு நாடுகளுடன் தொடர் பேச்சுவார்த்தை

ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஏற்பட்டு புதிய முதலீடுகளும் ஈர்க்கப்பட்டது.

தொழிற் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களை, மேற்கண்ட வர்த்தக தொழிற் கண்காட்சிகளில் காட்சிப்படுத்தியதால் ரூ.85 கோடி மதிப்பிலான புதிய வர்த்தக ஒப்பந்தங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெற்றுள்ளன .

மேலும், கடந்த 2018 மார்ச் மாதம் 8 முதல் 10 தேதி வரையில், சென்னையில் நடைபெற்ற அகில உலக பொறியியல் தொழிற் காட்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பங்கு பெற மானிய விலையில் 70 காட்சி அரங்குகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பொருட்காட்சியின் மூலம் 100 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.650 கோடி) மதிப்பிலான வர்த்தக ஒப்பந்தங்கள் பெறப்பட்டுள்ளன. மேலும், இப்பொருட்காட்சியில் அதிகளவில் வெளிநாட்டவர்கள் பங்கு பெற்றதாலும் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களுடைய பொருட்களை ஏற்றுமதி செய்ய அரிய வாய்ப்பு உருவானதாலும் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 தேதி முதல் 19 தேதி வரை

நடைபெறும் அகில உலக பொறியியல் தொழிற்காட்சி நடத்த பொறியியல் ஏற்றுமதி அபிவிருத்தி கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது.

அகில உலக அளவில் நடைபெறக்கூடிய கண்காட்சிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பங்குபெறுவதும் மற்றும் புதிய முதலீடுகளை கொண்டு வருவதும் தொடர்ந்து நடைபெறும்.

## 3.6 மூலப்பொருட்கள் விநியோகம்

மூலப்பொருட்களாகிய இரும்பு மற்றும் எஃகு, மெழுகு, பொட்டாசியம் குளோரேட் மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் (நேரடி மற்றும் முகமை) ஆகியவற்றை அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சாத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள மூலப்பொருள் கிடங்குகளின் வழியாகவும் ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய கிளை அலுவலகங்களின் வழியாகவும் விநியோகம் செய்து வருகின்றது.

**2017–18** ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, எட்டிய சாதனையின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | மூலப்பொருள் | இலக்கு 2017–18 | | சாதனை (2017– 2018) (மார்ச் 2018 வரை) | |
|---|---|---|---|---|---|
| | | அளவு (மெ.டன்னில்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) | அளவு (மெ. டன்னில்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) |
| 1 | இரும்பு மற்றும் எஃகு | 60.00 | 20.60 | - | - |
| 2 | பாரபின் மெழுகு | 2,775.00 | 2,169.21 | 2,001.450 | 1,507.877 |
| 3 | காகிதம் (நேரடி விற்பனை) | 145.00 | 98.150 | 143.780 | 100.74 |
| 4 | காகிதம் (முகமை விற்பனை) | 580.00 | 380.00 | 353.262 | 209.63 |
| 5 | பொட்டாசியம் குளோரேட் | 5.50 | 5.320 | - | - |
| **மொத்தம்** | | **3,565.50** | **2,673.280** | **2,498.492** | **1,818.247** |

## 3.7 விற்பனை உதவித் திட்டம்

விற்பனை உதவித் திட்டத்தின் கீழ், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சிட்கோ உதவி செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் சிட்கோவிடம் பதிவு செய்த குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் சார்பாக சிட்கோ மாநில அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை அணுகி, வழங்கல் ஆணைகளை பெற்று உதவுகிறது. சிட்கோ நிறுவனத்தால் பெறப்பட்ட வழங்கல்

ஆணைகள், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் இடையே பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. தரமான பொருட்கள் சரியான நேரத்தில் வழங்கப்படுவதை சிட்கோ நிறுவனம் உறுதி செய்கிறது. வழங்கப்பட்ட பொருட்களுக்கு அரசுத் துறைகள் / உள்ளாட்சி அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் தொகையில் 3 விழுக்காடு ஆலோசனைக் கட்டணமாக பிடித்தம் செய்த பின்னர் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பொருட்களுக்கு உண்டான தொகை வழங்கப்படுகிறது.

சிட்கோ நிறுவனம் 2017–18ஆம் ஆண்டில் ரூ.84.82 லட்சங்கள் மதிப்பிலான வழங்கல் ஆணைகளை விற்பனை உதவி திட்டத்தின் கீழ் குறு மற்றும் சிறு நிறுவனங்கள் வாயிலாக நிறைவேற்றி இருக்கிறது.

## 3.8 மின் ஆளுமை

சிட்கோ தனது வணிக செயல் முறைகளை திறமையாகவும் வெளிப்படையாகவும் ஆரம்பம் முதல் முடிவு வரை முழுமையாக தானியங்கியாக செயல்படவும், எளிதான வணிக செயல்பாட்டை மேம்படுத்தவும், தனது சேவைகளை இணையதளம் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்

நிறுவனங்களுக்கு அளித்து முதலீட்டு நிலைமையை உயர்த்திடவும் கணினிமயமாக்கப்பட்ட தொழில்நுட்பத்தை ரூ.1.77 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தின் மூலம் சிட்கோ ஒரு மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தை மென்பொருள் மற்றும் வன்பொருள்களை வழங்க நியமித்துள்ளது. இந்த மின்ஆளுமை திட்டம் புவியியல் தகவல் முறை மூலம் சிட்கோவின் அனைத்து பணிகளையும் தொழில்மனை / தொழிற்கூடம் ஒதுக்கீடு மற்றும் இது சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகள், மூலப்பொருட்கள் கொள்முதல் மற்றும் விநியோகம், ஒப்பந்த செயல்பாடுகள், மனிதவள மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் பிற பணிகளையும் செயல்படுத்தும் விதமாகவும் தொழில் மற்றும் முதலீட்டாளர்கள் தகவல் பரிமாற்றம் வலைதளம் மூலமாகவும் செயல்படும் மின்ஆளுமை திட்டம். சிட்கோவில் செயல்படுத்துவதற்கான பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

# 4. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI)

## 4.1 அறிமுகம் மற்றும் உருவாக்கம்

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**(TANSI)** **1965**ஆம் வருடம் தொழில் மற்றும் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த **64** சிறுதொழில் கூடங்களை ஏற்றுக்கொண்டு **1.12.1965** முதல் உற்பத்தியை தொடங்கியது. இந்நிறுவனம் கம்பெனி சட்டம், **1956**ன்படி பதிவு செய்யப்பட்டது.

**அலகுகளின் எண்ணிக்கை**

சந்தையின் தேவைக்கேற்ப டான்சி தன்னுடைய நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி அலகுகளை மறுசீரமைத்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் தற்போது டான்சிக்கு **24** தொழிற்கூடங்கள் மற்றும் நாமக்கல் மற்றும் திருச்சியில் **2** காட்சியகங்களும் உள்ளன.

| | | |
|---|---|---|
| பொறியியல் தொழிற்கூடங்கள் | – | 10 |
| மர அறைகலன் தொழிற்கூடங்கள் | – | 11 |
| சிறப்பு வகை தொழிற்கூடங்கள் | – | 3 |
| **மொத்தம்** | – | **24** |

## 4.2 நடவடிக்கைகள்

டான்சி மின் வாரியத்திற்குத் தேவையான மின்கடத்தி பொருட்கள் தயாரித்தல், மரம் மற்றும் எஃகினாலான அறைகலன்கள், கட்டுமான வேலைகள், கைப்பம்புகள் உற்பத்தி செய்தல், சாராவியைப் பயன்படுத்திக் தயாரிக்கப்படும் சர்ஜிகல் ஸ்பிரிட் போன்ற பொருட்களையும், வர்ணம், குழந்தைகள் எடை போடும் கருவி, கட்டுமானத்தில் அறைகள் பிரித்தல் போன்ற உள்வேலைப்பாடுகள் முதலியவற்றை செய்து வருகிறது. மேற்கூறிய பொருட்களை உற்பத்தி செய்வதில் டான்சி தனி முத்திரையை பதித்து தனித்தன்மை பெற்றுள்ளது. மேலும் டான்சி, ‘சர்வசிக்சா அபியான்’ திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குத் தேவையான பலவகைப்பட்ட அறைகலன்களையும், அரசு மாணவ/மாணவியர் விடுதிகளுக்கான ஸ்டீல் கட்டில்கள், மின் பகிர்மான கழகத்திற்குத் தேவையான மின் கடத்திப் பொருட்கள், மருத்துவ சேவை துறைக்குத் தேவையான சர்ஜிகல் ஸ்பிரிட் மற்றும் பஞ்சாயத்து மற்றும் மாவட்ட ஆட்சியரகத்துக்கு குடிநீர் வழங்க தேவையான கைப்பம்புகளையும் அதன் உதிரி பாகங்களையுள் உற்பத்தி செய்து வழங்கி வருகிறது.

நவீன தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக திறன் ஆகியவற்றை பயன்படுத்தி டான்சி சிறந்த உற்பத்தி திறனை நோக்கி முன்னேறி வருகிறது. கீழ்க்காணும் டான்சியின் அலகுகள் ஐ.எஸ்.ஓ–9001:2008 தரச்சான்றிதழை பெற்றுள்ளன:

- டான்சி கைப்பம்பு தொழிற்கூடம், அம்பத்தூர்
- டான்சி கருவி மற்றும் பொறியியல் தொழிற்கூடம், திருச்சி
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்கூடம், பழனி
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்கூடம், இராஜபாளையம்
- டான்சி எஃகு அறைகலன் தொழிற்கூடம், வேலூர்
- தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம், அம்பத்தூர்

## 4.3 வகைகள் மற்றும் உற்பத்தி பொருட்கள்

| தொழிற்கூட வகைகள் | உற்பத்தி பொருட்கள் |
|---|---|
| (அ) கட்டுமானம் மற்றும் பொறியியல் | தொழிற்சாலை கட்டிடங்கள், பாலங்கள், பேருந்து நிலையங்கள் போன்றவற்றிற்கு தேவைப்படும் பலவகை மென் கட்டுமானங்கள், கதவு மற்றும் ஜன்னல்கள், தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்திற்கு தேவையான மின் கடத்தி பொருட்கள், நிலைப்பெட்டிகள், கிரில்கள், உலோகத் தகடுகளாலான பொருட்கள், |
| (ஆ) அறை கலன்கள் | மர அறைகலன்கள், தடுப்பு மற்றும் உள்ளறை வேலைப்பாடுகள், அறைகலன்கள். வீடு, அலுவலகம், கல்லூரி விடுதி மற்றும் மருத்துவ மனைகளுக்குத் தேவையான எஃகு அறைகலன்கள். |
| (இ) சிறப்பு வகைத் தயாரிப்புகள் | ஆழ்துளை குழாய் கைப்பம்புகள், பெரும் ஆழத்திற்கான ஆழ்துளை குழாய் கைப் பம்புகள், பம்புகளின் உதிரி பாகங்கள், ஸ்பிரிட்டை மூலப் பொருளாகக் கொண்ட மருத்துவ பொருட்களான சர்ஜிகல் ஸ்பிரிட், டி–நேச்சர்ட் ஸ்பிரிட், டிஞ்சர் செட்ரிமைடு, பொவிடோன் அயோடின், ஸ்பிரிட்டை அடிப் படையாகக் கொண்ட தொழில் பொருட்களான காஸ்கெட் ஷெல்லாக், பிரென்ச் பாலிஷ், தின்னர் மற்றும் கிருமி நாசிகளான லைசால், பெனாயில் |

## 4.4 கைவசமுள்ள பணி ஆணைகள் (மார்ச் 2018 அன்றுள்ளவாறு)

அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிலிருந்து சுமார் ரூ.23 கோடி மதிப்பிலான பல்வேறு பணி ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

2017–18ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது:

- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் உயர் தொடக்கப்பள்ளிகளுக்கு மாணவர் கணிதம் கற்கும் உபகரணங்களை ரூ.7 கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.
- கால்நடை பராமரிப்புத் துறைக்கு தேவையான எஃகு மற்றும் மர அறைகலன்களை ரூ.2 கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.
- பள்ளி கல்வித் துறையின் மூலம் பல்வேறு அரசு பள்ளிகளுக்குத் தேவையான அறைகலன்களை ரூ.1 கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

- பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு தேவையான அலுவலக அறைகலன்களை **ரூ.1** கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.
- வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்குத் தேவையான எஃகு மற்றும் மர அறைகலன்களை ரூ.1 கோடிக்கு உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.

## 4.5 தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம் (டாபப்) (டான்சியின் துணை நிறுவனம்)

இந்நிறுவனம் டான்சியின் முழு ஆளுமைப் பெற்ற துணை நிறுவனமாக வர்ணங்கள் மற்றும் அது சம்பந்தமான பொருட்களை தயாரித்து வழங்க துவக்கப்பட்டது. இந்நிறுவனம் 18.11.1985 முதல் அம்பத்தூரில் அதன் பதிவுபெற்ற தலைமையிடத்தைக் கொண்டு உற்பத்தியை ஆரம்பித்தது. இதன் முக்கிய பணியானது பல்வேறு அரசு துறைகள், போக்குவரத்து கழகங்கள் மற்றும் தமிழக அரசு சார்பு துறைகளுக்குத் தேவைப்படும் சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்து குறியிடும் இரப்பர் கலந்த வர்ணம் மற்றும் இதர வர்ணங்களை உற்பத்தி செய்து வழங்கி வருவதாகும்.

## 5. தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN)

### 5.1 அறிமுகம்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII-TN) இலாப நோக்கமில்லா நிறுவனமாக தமிழக அரசால் 2001–ம் ஆண்டு துவங்கப்பட்டது. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தொழில் துவங்குவது, முதல் தொழிலை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஏதுவான சூழலை உருவாக்கிட பல்வேறு பயிற்சிகளை வழங்கி வருகிறது. இவை மட்டுமின்றி ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் உருவாக்குவதற்கான வாய்ப்புகளை தொழில் முனைவோருக்கு ஏற்படுத்தி தருகிறது. இந்நிறுவனம் தொடங்கிய நாள் முதல் இந்நாள் வரை பல்வேறு துறைகளில் 1.91 இலட்சம் தொழில் முனைவோர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

உலகத் தொழில் குறியீடு 2017–ல், உலகளவில் இந்தியா 29 இடங்கள் முன்னேறி தற்போது 69–வது நிலையில் உள்ளது. எனினும் தொடர் அமர்வு திறன்கள், தொழில் தொடக்க திறன்கள், வாய்ப்புகள் உணர்தல், இடர் எதிர்கொள்ளும் தன்மை மற்றும் தொழில் நுட்பம் புகுத்துதல்

போன்றவற்றில் பலவீனமாக உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழகத்தில் பெருகிவரும் உற்பத்தி மற்றும் அதீத வளர்ச்சியில் உள்ள சேவைத் துறைகளில் தொழில் திறமைகளை வளர்த்தல், கூட்டாக தொழில் செய்தல், அனுபவமிக்க தொழில்துறை வல்லுநர்களுடன் இணைந்து புதுமையான படைப்புகளை உருவாக்கிட தொழில் ஆலோசனைகள், தொடர் அமர்வுகள் மூலம் சந்திப்புகள் நடத்திட வழிவகை செய்தல் போன்றவற்றின் மூலம் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி, வேலைவாய்ப்பை பெருக்கி வருகிறது. இவைகளின் மூலம், மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் சீரிய முன்னேற்றங்கள் அடைய தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் முக்கிய பங்காற்றி வருகிறது.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நோக்கம், தொலைநோக்கு பார்வை மற்றும் முதன்மை கோட்பாடுகள் கீழ்கண்டவாறு:

**தொலைநோக்கு**

தொழில்முனைவு மற்றும் புதிய வர்த்தக வாய்ப்புகள் / கண்டுபிடிப்புகள் குறித்த கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் செயல்பாடு போன்ற பல்வேறு துறைகளில் தமிழகத்தின் வள ஆதார மையமாக தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் செயல்பட்டு தமிழகம் முழுவதும், தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம் உள்ளடக்கிய ஒரு தொழில்முனைவு கலாச்சாரத்தை ஏற்படுத்தி வளர்ச்சி காண முனையும்.

**குறிக்கோள்**

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வேகமான மற்றும் தொய்வில்லாத நிலைத்த தன்மையினை உள்ளடக்கிய வளர்ச்சிக்காக, தாக்கமிகு சிறந்த தொழில் முனைவு திறமைகளை ஏற்படுத்துதல், வர்த்தக பிணைப்புகளை உருவாக்குதல் மற்றும் பங்குதாரர்களை கொண்ட வர்த்தக அமைப்பை ஏற்படுத்துதல், உரிய ஆலோசனை வழங்குதல், பயிற்சி, தகவல் தொழில்நுட்பம், புத்தாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் வர்த்தக சேவைகளை வழங்குவதன் மூலமாகவும், வேலைவாய்ப்பு மற்றும்

பொருளாதார வளர்ச்சிக்கு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வழிவகுக்கிறது.

**முக்கிய பண்புகள்**

தொழில்முனைவு, நேர்மை, பாரபட்சமின்மை, காலந்தவறாமை, கூட்டு முயற்சி, மகத்தான சேவை, தலைமைப் பண்பு, புத்தாக்கம், தர உணர்வு ஆகிய முக்கிய பண்புகளை தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வேரூன்றச் செய்தல்.

**கொள்கைகள்**

கீழ்க்காணும் இலக்குகள் மற்றும் கொள்கைகளை கொண்டு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் செயல்படுகிறது.

அ. தமிழகத்தில் புத்தாக்க கலாச்சாரம் மற்றும் பேரார்வத்துடன் தொழில்முனைவை பரப்புதல்.

ஆ. ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய பிரிவினர்களிடையே தொழில் முனைவுத் திறனை கட்டமைத்தல்.

இ. தொழில்நுட்பம் சார்ந்த தொடக்க நிலை உள்ளடக்கிய தொழில்முனைவோருக்கான தொழில் சூழலை விரிவாக்குதல்.

ஈ. தொழில்களில் ஏற்படும் இடர்களை குறைத்தல் மற்றும் புத்தாக்க செயலாக்கத்தில் ஏற்படும் தோல்விகளை தவிர்த்தல்.

உ. பாடதிட்டத்தில் தொழில்முனைவு கல்வியினை உட்புகுத்துதல்.

ஊ. மற்றும் புத்தாக்கம் குறித்த ஆராய்ச்சி, கணக்கெடுப்பு மற்றும் வெளியீடுகள்.

எ. தொழில் முனைவு மற்றும் புத்தாக்கத்திற்கு ஏற்ற சூழலை உருவாக்கிடும் வகையில் இத்துறையில் ஈடுபட்டுள்ள தனியார் மற்றும் அரசு அமைப்புகள் இடையே வலுவான கூட்டுப் பங்காண்மை ஏற்படுத்துதல்.

ஏ. தொழில்-முனைவு மற்றும் புத்தாக்கம் குறித்த கொள்கை பரிந்துரைகளை அரசுக்கு வழங்குதல்.

## 5.2 நிர்வாகம்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், அரசின் முதன்மைச் செயலர் / இயக்குநரின் தலைமையின் கீழ் அரசின் பல்வேறு துறைச் செயலர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் உள்ளடக்கிய பொதுக் குழுவால் வழிநடத்தப்படுகிறது.

## 5.3 செயல்பாடுகள்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் இரட்டை அணுகுமுறை அடிப்படையில் தொழில்முனைவுக்கான மேம்பாடு மற்றும் புத்தாக்க முயற்சிகளுக்கான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**அ. தொழில்முனைவோர் மேம்பாடு**

- தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்.
- குழும வளர்ச்சித் திட்டங்கள்.

**ஆ. புத்தாக்க முயற்சிகளை ஊக்குவித்தல்**

- தமிழ்நாடு உற்பத்தி வணிக காப்பக உட்கட்டமைப்பு உருவாக்கும் திட்டம்.
- ஆராய்வுகள்.
- மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு மேம்பாட்டு திட்டம்.
- புத்தொழில்முனைவு இயக்கம்.

**இ. தகவல் தொடர்பு தொழில் நுட்பம்**

### 5.3.1 தொழில்முனைவோர் மேம்பாடு

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் அனைவராலும் எளிதாக பின்பற்றக்கூடிய தொழில்,

வாழ்க்கை சுழற்சி செயல்முறை சார்ந்த பயிற்சிகளை அளிக்கிறது. அனுபவமிக்க தொழில் துறை வல்லுனர்களின் வழிகாட்டுதல் மற்றும் தொடர் அமர்வுகள் மூலமாக பயிற்சிகள் அளித்தல், வெற்றியை கொண்டாடுதல், கவுரவப்படுத்துதல், தொழில்முனைதல் மற்றும் ஆவணப்படுத்துதல் ஆகிய முனைப்புகளுடன் புத்தாக்க சூழலை மாநில முழுவதும் உருவாக்கி வருகிறது. இந்நிறுவனத்தின் பல்வேறு வகை பயனாளிகளான மாணவர் சமூகம், வளரும் தொழில்முனைவோர், தொழில் நிறுவனங்கள் மற்றும் குழுமங்களின் தேவைகளுக்கேற்ப பயிற்சி அணுகுமுறைகள் அமைக்கப்பட்டுள்ளது.

- தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள், தொழில்முனைவோர் விழிப்புணர்வு திட்டங்கள் மற்றும் தொழில் துவக்க பயிற்சி வகுப்புகள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தேவையின் அடிப்படையில் பயிற்சிகளை வழங்குகிறது.
- குழுமம் தொழில் வளர்ச்சித் திட்டங்கள்

**2017–18ல் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள்**

தொழில்முனைவு மற்றும் புத்தாக்கத்திற்கான விரிவான மேலாண்மை திட்டம் **2016–2021**ல், பயிற்சி, வழிகாட்டுதல், தொடர் அமர்வு (networking), வெற்றிகளை கொண்டாடுதல் மற்றும் ஆவணப்படுத்துதல் ஆகிய முனைப்புகளின் கீழ் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்கத்திற்கான சூழலை உருவாக்குவதில் சம்மந்தப்பட்ட பங்குதாரர்களுடன் தெளிவான திசையில் இணைந்து பயணிக்க இந்நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது. தமிழகத்தில் தொழில்முனைவு சூழல் புதிய உத்வேகத்துடன் செயற்பட்டு, தெளிவான மாற்றத்தினை வெளிக்கொணர தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் முயன்று வருகிறது. **2017–18**ல் செயல்பாடுகளின் அறிக்கை கீழ்கண்டவாறு:

### 5.3.1.1 தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டங்கள்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் விரிவான மேலாண்மை திட்டம் **2016–2021**ல், தொழில் வாழ்க்கை சுழற்சி செயல்முறை சார்ந்த பயிற்சி மற்றும் தொழில்முனைவோர் ஊக்குவிப்பு சேவைகளை வழங்கி உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆரம்ப நிலை

தொழில்முனைவோர்கள், தொழில் புரிவோர்கள், தொழில் வழிகாட்டுநர்கள் மற்றும் தொழில் குழுமங்கள் உள்ளடக்கிய மொத்தம் 26,097 நபர்களுக்கு 2017–18ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் பல்வேறு திட்டத்தின்கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

- **முதல் கட்டம்** (கருத்துரு நிலை) – *ஒரு நாள் தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம்கள்* மாவட்டம் தோறும் நடத்தப்பட்டு வருகிறது. மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் சங்கங்களுடன் இணைந்து 61 நகரங்களில் முகாம்கள் நடத்தபட்டதில் தமிழ்நாடு முழுவதும் 5,057 புதிய தொழில் தொடங்க ஆர்வமுள்ளோர் கலந்து கொண்டனர். அவர்களுக்கு புதிய தொழில் தொடங்வதில் உள்ள நன்மைகள் மற்றும் சவால்கள், தொழில் துவங்குவதற்கான படி நிலைகள், தொழில் முனைவோர்க்கான தகுதிகள் மற்றும் அரசு திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

- தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன வளாகத்தில் இயங்கும் தொழில் உதவி

மையம் **2015–16**ல் துவங்கப்பட்டு இதுவரை தொழில் தொடங்க ஆர்வமுள்ள **6,210** நபர்கள் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் மூலம் உதவி பெற்றுள்ளனர்.

- தொழில்முனைவோர் மற்றும் தொழில்களை உருவாக்குவதில், தொழில் வழிகாட்டுதல் முக்கிய பங்கு வகிக்கிறது. ஜீன் **2016** முதல் பிரதி வியாழக்கிழமை மாலை சென்னை மற்றும் தமிழ்நாடு முழுவதும் *தொழில் வழிகாட்டி மையம்* (Enterprise clinic) நேர்காணல் மூலம் பல்துறை வல்லுநர்கள் உதவியுடன் **4,605** புதிய தொழில் தொடங்க ஆர்வம் உள்ளோர்களுக்கு தங்கள் திட்ட வரைவுகளை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 7 மாவட்டங் களில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் மாவட்ட சங்கங்கள் உடன் இணைந்து தொழில் ஊக்குவிப்பு சேவைகள் (Business Facilitation Services Programme) வழங்கப்படுகிறது.

- **இரண்டாவது கட்டம்** (தொழில் திட்டமிடல் நிலை), ஐந்து நாட்கள் தொழில் வணிக மாதிரி வடிவம் மற்றும்

திட்ட தயாரிப்பு பயிற்சிகள் இக்கட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன்கீழ், **9** பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு அதில் **225** நபர்கள் கலந்துகொண்டு தொழில் மாதிரி வடிவத்தினை தயாரிக்கவும், அரசு கடன் உதவி திட்டங்களின் கீழ் விண்ணப்பிக்க வேண்டிய வழிமுறைகள் அறியவும் உதவிகள் செய்யப்பட்டு குறிப்பிட்ட துறை சார்ந்த முகாம்களும் நடத்தப்பட்டுள்ளது.

- **மூன்றாவது கட்டம்** (தொழில் தொடங்கும் நிலை), தொழில்முனைவோர்கள் அரசு நல திட்டங்கள் (UYEGP, PMEGP, NEEDS, TAHDCO மற்றும் பல) மூலம் கடனுதவி பெற்றவர்களுக்கு தொழில் தொடங்கி அதை நிர்வகிக்கத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. அரசின் முக்கிய திட்டமான புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)–ன் கீழ் இவ்வாண்டில் கடனுதவி பெற்ற **722** பயனாளிகளுக்கு ஒரு மாத கால தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல் வேலையில்லா இளைஞர்களுக்கான

வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்(UYEGP)-ன் கீழ் **5,349** தொழில்முனைவோருக்கு ஒரு வார கால பயிற்சியும், **206** நபர்களுக்கு பிரதம மந்திரி வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்(PMEGP)-ன் கீழ் முறையே **7** நாட்கள் மற்றும் **10** நாட்கள் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சோதனை அடிப்படையில், அரசுத் திட்டத்தின் கீழ் பயன் பெறாத ஆர்வமிக்க **39** தொழில்முனைவோர்களுக்கு ஒரு மாத கால பொது தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- **நான்காம் கட்டம்** (நடப்பு தொழில்முனைவோர்) தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நடத்துபவர்களுக்கு அன்றாட செயல்பாடுகள் மற்றும் விரிவாக்கம் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. மாறி வரும் சந்தை நிலவரங்களுக்கு தகுந்தவாறு, தற்சமயம் இயங்கி வரும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களுக்காக தமிழ்நாடு முழுவதும் குறுகிய கால பயிற்சி வகுப்புக்கள் **1/2** நாளிலிருந்து **5** நாட்கள் வரை குறிப்பாக சமூக வலைத்தள வணிக

மற்றும் சேவை வரி (GST) / மின் வழி பட்டியலிடல் (e-Way billing), நிதி மற்றும் மூலதன மேலாண்மை நிர்வகித்தல் (Fund Flow and Working Capital Management), குடும்ப வணிக மேலாண்மை (Family Business Management), மின்னணு முறையில் சந்தைப்படுத்தல் (Digital Marketing), விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் வியாபார யுக்திகள் (Sales and Marketing Strategy), ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பற்றிய விபரங்கள் (Export and import procedures), காப்பீடு சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் (Risk and Insurance Management) மற்றும் மின்னணு பணப்பரிவர்த்தனைகள் (Digital Payments) போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

- பிரதி மாதம் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவன வளாகத்ததில் வெற்றிகரமாக தொழில் புரியும் தொழில்முனைவோர்களை கொண்டு தத்தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் தொடர் அமர்வு சந்திப்புகளையும் நடத்தி வருகிறது.

**அ) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு நிறுவனத்தின்** கீழ் (TAHDCO) கடன்பெறும் தொழில்முனைவோருக்காக சிறப்பு பயிற்சியினை தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தொடந்து இரண்டாம் ஆண்டாக சிறப்புடன் நடத்தி வருகிறது. இவ்வாண்டு, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் **12,250** தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. இப்பயிற்சியில் முக்கியமாக விண்ணப்பதாரர்களின் படிவங்கள் பரீசீலிக்கப்படுவதற்கு முன்பாக ஒருநாள் பயிற்சி முகாம்கள் அந்தந்த மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. அதில் தொழில் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் வங்கிக் கடன் பற்றிய விபரங்கள் பயிற்சி அளிக்கப்பட்டு கடன் ஒப்புதல் பெற்ற அனைத்து TAHDCO தொழில்முனைவோர்களுக்கு கடன் பட்டுவாடா செய்யப்படுவதற்கு முன் **6** நாட்கள் தொழில் ஆரம்பிக்க பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. **இவ்வாண்டில் மொத்தம் 3,002 தொழில்முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.**

**ஆ) வணிக உதவி சேவைகள் திட்டம் –** தொழில் துவக்க நிலையில், புதிய தொழில்முனைவோருக்கு அனுபவமிக்க தொழில்துறை வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோருடன் நேரடியாக சந்திப்புகள் நடத்தி வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது. தொழில் வழிகாட்டுநர்கள் புதிய தொழில்முனைவோருக்கு திறம்பட தொழில் ஆலோசனைகள் வழங்குகின்றனர். வணிக வழிகாட்டிகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய ஏற்றத்தை ஏற்படுத்த சிறந்த யுக்திகளை எடுத்துக் கூறி புதுமையான படைப்புகளை உருவாக்கிட வாய்ப்புகளை பயன்படுத்துமாறும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**இ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மையம் –** மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்களில் பொது கொள்முதல் செயல்முறையில் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்கவும் தொழில் நுட்பம் மற்றும் செயல்திறனை மேம்படுத்தி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் விதமாக தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மாநிலம் முழுவதும் பயிற்சி பட்டறைகளை நடத்தி வருகிறது. இம்முயற்சி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் நிறுவனங்களின் தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் திறன்

மேம்பாட்டை ஏற்படுத்தி பொது கொள்முதல் செயல்முறையில் திறம்பட கலந்து கொள்ள வழிவகுக்கிறது.

## 5.4 குழும வளர்ச்சித் திட்டம்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தொழில் குழுமங்கள் மற்றும் அதனை சார்ந்த தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு பயிற்சி முகாம் / கருத்தரங்கங்கள் / பயிற்சி பட்டறைகள் நடத்தி வருகிறது. இப்பயிற்சி திட்டங்களின் மூலம் மேற்படி குழுமங்கள் மற்றும் குழும அங்கத்தினர்கள் தங்கள் திறனை வளர்த்துக் கொண்டு சந்தையில் தங்களை நிலை நிறுத்திக்கொள்ளும் தன்மையை வளர்க்கும் வகையில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அமையப்பெற்றுள்ள குழுமங்களின் எண்ணிக்கை / வகைப்பாடு / குழுமங்களின் தற்போதைய நிலை மற்றும் அதன் இயக்கங்கள் குறித்த தொகுப்பு விவர ஆய்வு 6 இடங்களில் மாவட்ட தொழில் மையம் (DIC), MSME-DI, SIDCO ஆகிய நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்கள் துணையோடு நடத்தப்பட்டது. இதன் நோக்கம் புதிதாக தொழில் குழுமங்கள் தொடங்க ஏற்ற இடங்கள் மற்றும்

செயல்பாட்டில் உள்ள தொழில் குழுமங்கள் குறித்த விவரம் மற்றும் அவற்றின் தரத்தை உயர்த்தும் வழிமுறைகள் பற்றிய ஆய்வு செய்வதாகும்.

தொழில் குழுமங்களை நிர்வகித்தல், குழுமங்கள் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் குழும செயல்பாட்டிற்கு தேவையான சேவைகளை செய்வது போன்ற பயிற்சிகள் அகமதாபாத்தில் இயங்கி வரும் தொழில்முனைவோர் மேம்பாடு (EDII-Ahmedabad) நிறுவனத்துடன் இணைந்து தொழில் குழும மேம்பாட்டு நிர்வாகிகளுக்கான ஐந்து நாள் பயிற்சி வழங்கப்பட்டது.

குழுமங்கள் அளவிலான திட்ட முறைகள் பற்றிய பயிற்சி Foundation for MSME Clusters (FMC), நிறுவனத்துடன் இணைந்து 2 இடங்களில் குழுமங்களின் நிர்வாக அங்கத்தினருக்கு திறன் மேம்பாட்டின் மூலம் குழுமங்களை பண்பட்ட தொழில் முறையில் திறம்பட நீண்ட காலம் நடத்தும் வகையில் பயிற்சி வழங்கப்பட்டது.

National Productivity Council (NPC) நிறுவனத்துடன் இணைந்து சிக்கன உற்பத்தி போட்டித்தன்மையை திட்டம் (Lean Manufacturing

Competitiveness Scheme-LMC), National Institute of Design(NID) நிறுவனத்துடன் இணைந்து பொருட்கள் வடிவமைப்பு திட்டம் (Design Clinic Scheme), Quality Council Of India(QCI) நிறுவனத்துடன் இணைந்து பூஜ்ஜிய குறைபாடு, பூஜ்ஜிய விளைவு (Zero-Defect, Zero-Effect - ZED) போன்ற திட்டங்கள் தொடர்பான பயிற்சிகள் தொழில் குழுமங்கள் மற்றும் அதனை சார்ந்த நிறுவனங்களின் வளர்ச்சிக்காக வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்கான பயிற்சி மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் National Manufacturing Competitiveness Program (NMCP) திட்டம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

பொருட்கள் வடிவமைப்பு திட்டத்தின் கீழ் (Design Clinic Scheme) பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான ஒரு நாள் பயிற்சி **6** இடங்களிலும், Indian Institute of Information Design Technology and Manufacturing (IIITD&M), Kancheepuram நிறுவனத்துடன் இணைந்து **2–**நாள் வடிவமைப்பு சிந்தனை (Design Thinking) பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

தொழில்முனைவோர் மேம்பாடு நிறுவனம்– அகமதாபாத் (EDII Ahmedabad) மற்றும் YES Bank ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து ‘Amazon Trained Professionals’ என்ற ஒரு நாள் பயிற்சி **3** இடங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் இல்லத்தரசிகளுக்கு மின் வணிக முறையை அறிந்து கொண்டு அதன் மூலமாக சந்தைப்படுத்த ஏதுவாக பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

தொழில் வணிக உறுப்பினர் அமைப்பு (Business Membership Organisation) சார்ந்த நிர்வாகிகளுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி Quality Council Of India(QCI) நிறுவனத்துடன் இணைந்து பல்வேறு மாவட்டங்களின் தொழில் குழுமங்களை சார்ந்த தொழில் சங்கங்களுக்கு நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் தொழில் வணிக உறுப்பினர் சங்கங்கள், தேசிய அங்கீகாரம் பெறும் வழிமுறைகள் மற்றும் அதன் மூலமாக கிடைக்கப்பெறும் மத்திய அரசின் சலுகைகள் குறித்தும் விளக்கங்கள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறையின் வழிகாட்டுதலின்படி, ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி

உதவியோடு கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்ட 14 சுற்றுலாத் தலங்களில் பாலின உணர்தல் குறித்த பயிற்சிகள் நடத்தப்பட்டது. சுற்றுலாத் தலங்களை பாதுகாப்பது குறித்த வீதி நாடகங்கள், சுற்றுலாத் தலங்களில் பெண்களுக்கான கிராமிய சுற்றுலா தொழில்முனைவு மற்றும் சந்தைப்படுத்துதல் பயிற்சிகள் சுற்றுலாவை மையமாக கொண்டு அமைய பெற்றுள்ள குழுமங்களுக்கு தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறையின் சார்பில் இந்நிறுவனத்தால் நடத்தப்பட்டது.

## 5.5 ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க ஊக்குவிக்க ஏற்படுத்திட தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சட்டத்திட்டங்களில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள தமிழக அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. மாநில புத்தாக்க மையமாக தொழில்முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவனம் விளங்கிவருகிறது.

### 5.5.1 புத்தாக்க மற்றும் காப்பகம்

தொழில்முனைவு மற்றும் புத்தாக்கக் கொள்கை முடிவுகள் எடுப்பதில் ஆராய்ச்சியினை கருவியாக கொண்டு, ஆவண வெளியீடுகளில் ஆராய்ச்சி மற்றும் ஆதாரத்தின் அடிப்படையில் கொள்கை முடிவுகளை எடுப்பதற்கான வசதிகளை இந்நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி மையங்கள் மற்றும் மாணவர்களுடன் சேர்ந்து ஆராய்ச்சி மாநாடுகளை தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் நடத்தி வருகிறது. தொழில்நுட்ப காப்பக மையங்களை உயர்கல்வி நிறுவனங்களில் TANII திட்டம் மூலம் நிறுவ தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தக்க வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

#### அ) தமிழ்நாடு உற்பத்தி வணிக காப்பக உட்கட்டமைப்பு உருவாக்கும் திட்டம்

உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி கூடங்களில் குறைந்த செலவில் உற்பத்தி காப்பகங்களை தமிழ்நாடு உற்பத்தி வணிக காப்பக உட்கட்டமைப்பு உருவாக்கும் திட்டம் மூலம் அமைத்து நடப்பில்

உள்ள தொழில்நுட்பம் சார்ந்த பொருளதாரத்தில் சாத்தியமான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை எட்டு நிறுவனங்கள் தொழில்நுட்ப அடிப்படையில் இத்திட்டத்தினை தேர்வு பெற்றிருக்கிறது. இக்காப்பகங்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சார்ந்த தொழில் வளர்ச்சிக்கு ஆதாரமாக செயல்பட்டு குறிப்பிட்ட துறைகளில் புத்தொழில்முனைவுகளை (Startup) ஊக்குவிக்க தூண்டுகோலாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த மையங்களில் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், படித்த சுயதொழில் முனைய ஆர்வமுள்ள இளைஞர்கள், பெண்கள் மற்றும் அந்த பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள், கிராமப்புற மக்கள் தொழில் நுட்பத்தின் துணை கொண்டு தொழில் தொடங்க வழிகாட்டுதல் தரப்படும்.

## ஆ) உயிரி தொழில்முனைதல்

உயிரி தொழில்நுட்பம் அடிப்படையிலான தொழில்முனைவு ஏற்படுத்துதல் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இதை ஊக்குவிக்கும் விதமாக வேளாண்மை சார்ந்த பல்வேறு மாநாடுகள் மற்றும் பயிற்சி

பட்டறைகள் நடத்தப்பட்டது. தொழில்முனைவு முற்படுவோருக்காக கோயம்பத்தூர் வேளாண் பல்பலைக்கழகத்தில் **200** பேருக்கு ‘உயிரி தொழில்முனைதலில் முலிகை ஆராய்ச்சி’ என்ற தலைப்பில் பயிலரங்கு நடத்தப்பட்டது இதில் மாணவர்கள் பெருந்திரளாகக் கலந்துக் கொண்டனர். அதை தொடர்ந்து மதுரை வேளாண் பல்கலைக்கழகத்தில் ‘தோட்டக்கலை தொழில்நுட்பம்’ என்ற தலைப்பில் பயிலரங்கு நடத்தப்பட்டது இதை தொடர்ந்து Flower & Fragrance Development Organisation (FFDC), Kannauj உடன் இணைந்து அத்தியாவசிய எண்ணெய்கள் பிரித்தெடுக்கும் வசதிகள் மற்றும் கட்டமைப்புகளை நிறுவுதல், தரக்கட்டுப்பாடுடன் கூடிய மல்லிகை மற்றும் வெட்டிவேரை சந்தைப்படுத்துதல் போன்ற முயற்சிகளை எடுத்து வருகிறது.

- **தமிழ்நாடு உயிர் பொருளாதார குழுமம் (Bio-economy Cluster) - 2016–**ம் ஆண்டு துவக்கத்தில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மாநிலத்தில் உயிர் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் கட்டமைப்புகளை உருவாக்கிட மகத்தான முயற்சி மேற்கொண்டு

உயிர் தொழில்நுட்ப உற்பத்தி மையங்களை ஏற்படுத்திட பல்வேறு பரிந்துரைகள் தீவிர ஆலோசனைகளுக்கு பிறகு ஆகஸ்ட் **2016–ல்** வழங்கப்பட்டன. உயிரி பொருளாதார குழுமத்தை தனி சட்ட நிறுவனமாக தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னை அண்ணா பல்கலைகழகம், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் இதர பல்கலைகழகங்களுடன் இணைந்து உருவாக்கப்–பட்டது. இதன் நிருவாக அமைப்பில் அங்கத்தினராகவும் சேர்த்து கொள்ளப்பட்டது.

**இ) மகளிர் தொழில்நுட்ப தொழில்முனைவோர்**

புதிய முயற்சியாக மகளிர் தொழில்நுட்ப தொழில்முனைவோர்களை உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தொழில்நுட்பம், பொறியியல், அறிவியல் மற்றும் கணிதம் படித்த பெண்கள் தொழில் நுட்பங்களின் துணை கொண்டு நிலைத்த நீடித்த தொழில்முனைதலுக்கு வழிவகுக்கப்படுகிறது. தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழ்நாடு மகளிர் உயிரி தொழில் நுட்ப பூங்காவோடு செப்டம்பர் **2017–ல்** ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக பல்வேறு பயிற்சிகள், ஆராய்ச்சிகள் மற்றும் கொள்கை சார்ந்த முடிவுகள் எடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஈ) அறிவுசார் சொத்துரிமை மையம்**

நெடுங்காலமாக தமிழ்நாடு படைப்பு திறன் மற்றும் புத்தாகத்தில் சிறந்த மாநிலமாக திகழ்கிறது. நாட்டின் முன்னனி கல்வி மற்றும் கலாச்சார மையங்களை கொண்டு சிறந்த பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மையங்கள், கலை பண்பாடு மையங்கள் அதிகம் உள்ள மாநிலமாகவும் தமிழகம் விளங்கி வருகிறது. மேலும், நாட்டில் முன்னனி குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் உற்பத்தி மையமாகவும் விளங்கி வருகிறது. அறிவுசார் சொத்துரிமை மையம் ஏற்படுத்துவதன் மூலம் அறிவுசார்ந்த புதுமையான மற்றும் நிலையான நிறுவனங்களை பாதுகாத்து வளர்ப்பதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படுகிறது.

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் கலைஞர்கள் மற்றும் படைப்பாளிகளுக்கு ‘Leveraging Intellectual Property Rights in Creative Industries’ பயிற்சி பட்டறை டிசம்பர் 2017–ல் நடத்தப்பட்டது. இதில் கலைஞர்கள், ஓவியர்கள், சிற்பிகள் போன்ற ஏராளமான

படைப்பாளிகளும், கலைக்கல்லூாி மாணவர்களும் கலந்து கொண்டு தங்களின் படைப்புகளை அறிவுசாா் சொத்தாக்குவது மற்றும் அவற்றை உலகமயமாக்குவது பற்றி தெரிந்து கொண்டார்கள்.

### 5.5.2 ஆராய்வுகள்

மாநிலத்தில் குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கவும், தோய்வை ஏற்படுத்தும் காரணிகளை கண்டறிந்து களையவும் முயற்சி மேற்கொள்ளபட்டுள்ளது.

- இதன் துவக்கமாக, தமிழ்நாட்டில் தொழில்முனைவோா் மற்றும் புத்தாக்கம் மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி “Leverag Reseach to Promate Enterpeneurhsip and Innovation in Tamil Nadu” என்ற தலைப்பில் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் புதுமைகளின் எல்லைகளை விரிவுபடுத்த, சிறிய நிறுவனங்கள் மற்றும் புத்தொழில்முனைவு திறன்களை செயல்படுத்த ஒருநாள் மாநாடு நடத்தி முடிக்கப்பட்டது. இந்நிகழ்வில் **250** நபர்கள் பங்கேற்று, உலகத் தயாாிப்பு மற்றும் கண்டுபிடிப்பு மையமாக தமிழ்நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான கூட்டு நடவடிக்கைத் குறித்து

கலந்துரையாடப்பட்டது. மாநாட்டின் தொடரை **innovaTN** என்ற தலைப்பில் வர்த்தக முத்திரை பதிவு செய்யப்பட்டு தொடர் பட்டறைகள் நடத்தப்பட்டு வருகிறது.

- குழும ஆராய்வுகள் – இந்த முன்னோடி முயற்சிக்கு மாநிலத்தின் 4 உயர் உற்பத்தி குழுமத்தின் ஆராய்வுகள் நடத்த RFPக்கள் அழைக்கப்பட்டு கிடைக்கபெற்ற முன்மொழிவுகள் திறனாய்வு செய்து சிறந்த திட்டங்களை அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாட்டில் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறையில் புத்தொழில்முனைவுகள் மற்றும் காப்பகங்கள் உட்பட பெண்களின் பங்கு பற்றிய ஆய்வறிக்கை தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.5.3 மாணவர்களுக்கான புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவு வளர்ச்சித் திட்டம் (IEDP)

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், கல்லூரிகள், பல்தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில், தொழில்முனைவு மற்றும் புத்தாக்க முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒரு

முழுமையான புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சி திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம் முயற்சிகளுக்கு உயர் கல்வி நிறுவனங்களிலும் அதனை சார்ந்த இடங்களிலும் சாதகமான சூழலை உருவாக்குதல், பயிற்சி நடத்துநர்கள், மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களின் தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்க திறமைகளை வளர்த்தல், புதிதாய் தோன்றும் நிறுவனங்களின் வளர்ச்சியினை அளவிட்டுக் காட்டுவதுடன் அவற்றின் மேம்பட்ட வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருத்தல் மற்றும் அறிவுசார் சொத்துரிமையை உருவாக்கவும் அதனை வணிகமயமாக்கவும் உறுதுணையாய் இருத்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

2016–17இல் சென்னை, தஞ்சாவூர், மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள 6 முன்னோடி கல்வி நிறுவனங்கள் மண்டல மையங்களாக (HUB) தெரிவு செய்யப்பட்டு, அந்தந்த பகுதிகளில் உள்ள 25–30 கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள், கல்லூரி வளாகத்திற்குள்ளாகவோ அல்லது அருகாமையிலோ புதிய தொழில் முனையங்களை அமைக்க உதவுகின்றன. தற்போது திருச்சி, திருநெல்வேலி மற்றும்

காரைக்குடியை சேர்த்து 9 மண்டல மையங்கள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

வாத்வானி அறக்கட்டளை – தேசிய தொழில் முனைவு பிணையம் (Wadwani Foundation-National Entrepreneurship Network) உடன் இணைந்து கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள், பயிற்றுநர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் உயர்நிலை மேலாண் குழுவிற்கும் செயல்முறை பயிற்சிகள் மூலமாக தொழில்முனைவுத் திறனை மேம்படுத்துவதற்கும் இணையதள பாடத்திட்டத்தின் மூலமும் தொழில் முனைவு மற்றும் புத்தாக்கத்திற்கான சூழலை ஏற்படுத்த உரிய பயிற்சியினையும் இந்நிறுவனம் அளித்து வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 384 கல்லூரிகள் தங்களை இணைத்துக் கொண்டுள்ளன. மேற்படி மண்டல மையங்களின் உறுப்பு கல்லூரிகளைச் சேர்ந்த 411 கல்லூரி மேலாண் உறுப்பினர்கள், 675 பயிற்றுநர்கள் மற்றும் 582 மாணவர்களுக்கு புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவு வளர்ச்சி திட்டம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த இணையதள பாடதிட்டத்தில் 18,677 மாணவர்கள் தன்னார்வத்துடன் சேர்ந்து 1,783 பேர் முதல் நிலை பாடத்திட்டத்தை பூர்த்தி செய்துள்ளனர்.

இந்த இணையதள பாடத்திட்டம் தவிர, பல்கலைக்கழகம் – தொழிற்சாலைகள் இடையே பிணைப்பை மேம்படுத்த தேவையான கருத்தரங்குகள் மற்றும் செயல் திட்டங்கள், உயிரி தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார் சொத்துரிமை சார்ந்த பட்டறைகள் நடத்தப்பட்டன. மேலும் பள்ளி மாணவர்களுக்கும் தொழில்முனைவுத் திறன்களை அறிமுகப்படுத்திட நான்கு பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

### 5.5.4 புத்தொழில்முனைவு இயக்கம்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழ்நாட்டிற்கான புத்தொழில்முனைவு குறித்த ஒரு வரைவு செயல்திட்டத்தினை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

- தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், புதிய தொழில் எண்ணங்களுக்கு உருவளிக்கும் போட்டிகளையும் குறிப்பிட்ட தலைப்புகளில் முன்வைக்கப்படும் பெருத்த சவால்களிலும் வெற்றி பெற்ற துவக்க நிலை

தொழில்முனைவோர்களுக்கு ஆதார நிதி உதவி வழங்கி இந்நிறுவனம் ஆதரவு அளிக்கிறது.

- 2018 பிப்ரவரி மாதம் 8 முதல் 11 ஆம் தேதி வரை தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் அண்ணா பல்கலைகழகத்துடன் சேர்ந்து "புத்தொழில்முனைவு" போட்டியினை(PITCH FEST) நடத்தியது. இந்த போட்டி முற்றிலும் மாணவர்களால் நடத்தப்பட்ட எனந்த்ரா (Enantra) நிகழ்ச்சியின் ஒரு பகுதியாகும். போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகளுக்கு ஆதார நிதி உதவி வழங்கப்பட்டது. இதில் தமிழ்நாடு முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

- அண்ணா பல்கலைக்கழகம் –சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரியின் காப்பகமாக செயல்படும் ஃபோர்ஜ் நிறுவனத்துடன் இணைந்து மாணவர்களுக்கு மூன்று நிலையிலான புத்தொழில்முனைவு தொடங்கும் செயல்முறையினை செயல்படுத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த வர்த்தக

யோசனைகளுக்கு 3 நாள் பயிற்சி பட்டறை நடத்தபட்டு சிறந்த சவால்களுக்கு நிதி உதவியும் வழக்கப்பட்டுள்ளது.

- கிராமப்புற பகுதிகள், 2 மற்றும் 3 ஆம் நிலை நகரங்களில் மூன்று நாள் புத்தொழில்முனைவு முகாம்கள் நடத்தப்பட்டன. இத்தகைய முகாம்கள் கோயம்புத்தூர், ஏலகிரி மலை, ஈரோடு, மதுரை, திருச்செங்கோடு, திருச்சி, தர்மபுரி ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டன. ஒவ்வொரு முகாம்களிலும் பல்வேறு பிரிவுகளை சார்ந்த 25 புத்தொழில்முனைவோர்கள் பங்கேற்றனர்.

- மேலும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், யங் இந்தியன்ஸ் (Young Indians), நேட்டிவ் லீட் அறக்கட்டளை (Native Lead Foundation) மற்றும் கொங்கு பொறியியல் கல்லூாி ஆகியவற்றுடன் ஈரோட்டில் 3 நாட்களுக்கு நடத்தப்பட்ட துவக்க நிலை தொழில்முனைவோர் முகாமுக்கு ஆதரவளித்து தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகளுக்கு பரிசு தொகை வழங்கியது.

## 5.6 தகவல் தொடர்பு தொழில் நுட்பம்

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சமூக வலைதளங்கள், மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் என விரிவான தகவல் தொடர்பு திட்டத்தை உருவாக்கியுள்ளது. புதிய தொழில்முனைவோருக்கு இந்நிறுவனத்தின் வலைதளம் (www.editn.in) மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் முகநூல், டிவிட்டர் மற்றும் யூடியூப் பக்கங்கள் வாயிலாக தொடர்ந்து மக்களுக்கு புதிய பயனுள்ள தகவல்களையும் தொழில் தொடர்பான குறிப்புகளையும் வழங்கி வருகிறது. தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தனது பயிற்சிகளுக்கு இணையத்திலேயே பதிவு செய்யும் வசதியையும், பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு பயிற்சி சான்றிதழையும் வழங்குகிறது. அவ்வாறு வழங்கப்படும் மின்னணு சான்றிதழ்களை இணைய தளத்திலேயே சரிபார்த்து உறுதிசெய்து கொள்ளலாம்.

- **பன்னாட்டுக் குழுக்களின் வருகை**

அ. தென் ஆப்பிரிக்காவிலிருந்து குவாசுலு நேடல் மாநில பாராளுமன்ற வேளாண் குழு (KwaZulu Natal

Provincial Parliamentary Agriculture Committee), தொழில்முனைவில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவத்தின் பங்கு குறித்து அறிய, வருகை புரிந்து நிறுவனத்தின் பணிகளும் வழங்கும் பயிற்சிகளையும் குறித்து அறிந்து பாராட்டிச் சென்றனர்.

ஆ. அமெரிக்காவின் ஒக்லஹோமா பல்கலைக்–கழகத்திலிருந்து 4 பேர் கொண்ட வெளிநாட்டினர் குழு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்திற்கு வருகை தந்து தமிழகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் சூழல், தொழில்முனைவு போன்றவை குறித்த புரிதலை ஏற்படுத்திக் கொண்டனர்.

- **மாநிலங்களுக்கிடையேயான பரஸ்பர வருகை:**

அ. குஜராத்தின் மெதனிபூர் பகுதியில் உள்ள ராம் நகர் உப்புக் குழுமத்தின் (salt cluster) பங்குதாரர்கள், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் ஏற்படுத்தி கொடுத்த சந்திப்பின் அடிப்படையில் தூத்துக்குடிக்கு வருகை புரிந்து உப்பு தயாரிப்பில் பயன்படுத்தப்படும் முறைகளையும், அதில்

உபயோகப்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் குறித்தும் பார்வையிட்டனர்.

ஆ. உத்திரபிரதேசம் கண்ணாஜில் உள்ள FFDC க்கு திறமையான மற்றும் வேளாண் தொழில்முனைவு எண்ணம் கொண்ட குழுவினை அழைத்து சென்று தேசிய அளவிலான பட்டறிவுப் பயணம் (National Level Field Exposure Visit) வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

- **புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

அ. இந்திய அரசு நிறுவனமான NIESBUD, புதுடில்லி, தமிழகத்தில் நடத்தும் நிகழ்வுகள் மற்றும் பயிற்சிகளுக்கு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்துடன் இணைந்து செயல்பட, NIESBUD மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஆ. தமிழ்நாடு மகளிர் உயிரி தொழில் நுட்ப பூங்கா, சென்னை இணைந்து தொழில்நுட்பம் சார்ந்த பெண் தொழில்முனைவோர்களை உருவாக்கவும்

பெண்களை, சுயதொழிலில் ஈடுபடச் செய்யவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

இ. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் சார்ந்த ஆராய்ச்சி, கொள்கைகள் பயிற்சிகள் மற்றும் கருத்து பட்டறைகள் நடத்திட Institute finance management and research (IFMR) சென்னையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது.

ஈ. வாசனை திரவியங்கள் சார்ந்த தொழிலை மேம்படுத்தவும் அது சம்மந்தமான ஆராய்ச்சி தொழில்நுட்பம், திறனை மேம்படுத்தவும், இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் FFDC Kannauj, Uttar Pradesh உடன் ஒரு பரஸ்பர புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

- **சர்வதேச MSME தினம் மற்றும் தேசிய தொழில்முனைவோர் வாரம் – 2017** தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் முதல் முறையாக வெகு சிறப்பாக

கொண்டாடப்பட்டது. தொழில்முனைவோர், பங்குதாரர்கள், தொழில் கூட்டமைப்புகள், வழிகாட்டிகள், தொழில்துறை குழுமங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர சங்கங்கள் ஆகியவைகள் பங்கேற்ற இந்நிகழ்வில் வெற்றிகரமான தொழில்முனைவோர், பங்குதாரர்கள் மற்றும் சேவை நிறுவனங்களுக்கு நினைவுப் பரிசளித்து கவுரவிக்கப்பட்டது.

- கருத்துப்பட்டறைகள், பயிற்சி வகுப்புகள், தொடக்கநிலை தொழில்முனைவோர் முகாம்கள் (startup camps), கண்காட்சிகள், பொருட்காட்சிகள் ஆகியவற்றில் வழங்குவதற்காக தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் **5,000** தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சிற்றேடுகள் (brochure) தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.
- கோவையில் நடைபெற்ற INTEC – 2017, சென்னையில் நடைபெற்ற IESS VII - 2018 போன்ற இந்தியாவில் நடைப்பெற்ற பல முன்னணி பன்னாட்டு கண்காட்சிகளில் வெவ்வேறு

தொடக்கநிலை தொழில்முனைவோர்/ கண்டுபிடிப்பாளர்களுடன் (startup/innovators) தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பங்கேற்று அவர்களின் பொருட்களை/தொழில்நுட்பங்களை பன்னாட்டளவில் சந்தைபடுத்த உதவி செய்யப்பட்டது.

- தொழில்முனைவு சூழலில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் பங்கு குறித்து காணொளி பதிவுகள் தயாரிக்கப்பட்டு அனைத்து தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் பயிற்சி வகுப்புகள் / முகாம்கள் / பட்டறைகளில் காட்டப்பட்டு வருகிறது.
- **‘நிமிர்ந்து நில்’** – என்ற பெயரில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் பயிற்சி பெற்று வெற்றி அடைந்த NEEDS, UYEGP, PMEGP, TAHDCO ஆகிய அரசு திட்டங்களின் கீழ் பயன்பெற்ற **50** வெற்றிகரமான தொழில்முனைவோர்களின் தொழில் விவரங்கள் ஆவணப்படுத்தப்பட்டு,

தொழில்முனைவோர் பற்றிய புத்தகம் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு அனைத்து மாவட்ட தொழில் மையங்களிலும், மற்றும் பங்குதாரர்களிடமும் கிடைக்கும்படி செய்யப்பட்டுள்ளது.

- **வெகுஜன பெருந்திரள் திட்டம் (Mass outreach programme)**

அ. அகில இந்திய வானொலி நிகழ்ச்சி – '**தொழிலும் வாழ்வும்**' என்ற தலைப்பில் அகில இந்திய வானொலியின் ரெயின்போ பண்பலையில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன்கிழமையும் மாலை **4.45– 5** மணி வரை 15 நிமிடம் ஒலிபரப்பாகிறது. இந்த நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு தொழில்முனைவு குறித்தும் அது குறித்து அரசு வழங்கும் உதவிகள், சலுகைகள் பற்றியும் கூறப்படுகிறது.

ஆ. DDK பொதிகை நிகழ்ச்சி '**நிமிர்ந்து நில்**' என்னும் தலைப்பில் பொதிகை தொலைக்காட்சியில்

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை காலை 11.30 முதல் 12 மணி வரை 52 வார நிகழ்ச்சியை ஒளிபரப்பி வருகிறது. இதுவரை 23 நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக ஒளிபரப்பப்பட்டு நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது.

- மின்னணு செய்தி மடல் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் இணையதளத்தின் வாயிலாக, அதன் செயல்பாடுகள் பற்றி பிரதி மாதம் வெளியிடப்படுகிறது.

- தமிழகத்தில் இதுவரை மேற்கொள்ளப்படாத புது முயற்சியாக பெண்களுக்கான பிரத்யேகமான தொடக்கநிலை தொழில் பயணம் (Startup payanam/Ula) தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது. இந்த பயணத்தில் பங்கு பெற்ற பெண்கள் பல முன்னணி startup நிறுவனங்களின் நிறுவனர்களை சந்தித்து, நிதி ஆதார வாய்ப்புகள், வழிகாட்டுதல் மற்றும் தேவையான தகவல் பறிமாற்றங்களை பெற்றுக்கொண்டனர். இந்த நிறுவனங்களிடம் இருந்து அனுபவ ரீதியாக அவர்கள் சந்தித்த சவால்கள், அவர்களுக்கு

கிடைத்த வாய்ப்புகள், சந்தைபடுத்துதல் போன்றவற்றையும் தெரிந்து கொண்டனர்.

- **சமூகம் சார்ந்த தொழில்முனைவு** (Social Entrepreneurship) பற்றிய ஒரு நாள் கருத்தரங்கு சென்னையில் நடைப்பெற்றது. இதில் சமூகம் சார்ந்த தொழில்முனைவுக்கு (Social Entrepreneurship) இருக்கும் தேவை மற்றும் சந்தை வாய்ப்புகளை குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

## 5.7 நிதி சாதனைகள்

தமிழக அரசு, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்திற்காக **2017–18–**இல் ரூ.**6.56** கோடி வழங்கப்பட்டு, **31.3.2018** வரை ரூ.**3.83** கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**பா.பென்ஜமின்**
**அமைச்சர் (ஊரகத் தொழில்)**

**குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற் கொள்கை 2008–ன்படி 2011–12 முதல் 2017–18 வரை வழங்கப்பட்ட மானிய திட்டங்களின் விவரம்**

**இணைப்பு 2.1**

**முதலீட்டு மானியம்**

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது (ரூபாய் இலட்சத்தில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011–12 | 5,000.00 | 5,000.00 | 1,316 |
| 2012–13 | 6,000.00 | 6,000.00 | 1,613 |
| 2013–14 | 7,000.00 | 7,000.00 | 1,541 |
| 2014–15 | 7,000.00 | 7,000.00 | 1,460 |
| 2015–16 | 8,000.00 | 8,000.00 | 1,265 |
| 2016–17 | 8,000.00 | 8,000.00 | 1,207 |
| 2017–18 | 16,000.00 | 16,000.00 | 2,102 |
| **மொத்தம்** | 57,000.00 | 57,000.00 | 10,504 |

**இணைப்பு 2.2**

**குறைந்தழுத்த மின் மானியம்**

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது (ரூபாய் இலட்சத்தில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011–12 | 600.00 | 600.00 | 1,371 |
| 2012–13 | 600.00 | 600.00 | 1,130 |
| 2013–14 | 600.00 | 600.00 | 1,169 |
| 2014–15 | 600.00 | 600.00 | 1,106 |
| 2015–16 | 600.00 | 600.00 | 1,004 |
| 2016–17 | 664.16 | 664.16 | 857 |
| 2017–18 | 600.00 | 600.00 | 671 |
| **மொத்தம்** | 4,264.16 | 4,264.16 | 7,308 |

## இணைப்பு 2.3

### மின்னாக்கி மானியம்

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது (ரூபாய் இலட்சத்தில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011–12 | 800.00 | 800.00 | 852 |
| 2012–13 | 2,348.09 | 2,348.09 | 1,958 |
| 2013–14 | 800.00 | 800.00 | 666 |
| 2014–15 | 800.00 | 800.00 | 734 |
| 2015–16 | 4,200.00 | 4,200.00 | 3,625 |
| 2016–17 | 800.00 | 800.00 | 587 |
| 2017–18 | 200.00 | 200.00 | 161 |
| **மொத்தம்** | **9,948.09** | **9,948.09** | **8,583** |

## இணைப்பு 2.4 (அ)

### பின்முனை வட்டி மானியம்

### தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கல்

| **வருடம்** | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது (ரூபாய் இலட்சத்தில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011–12 | 303.87 | 303.87 | 172 |
| 2012–13 | 24.48 | 24.48 | 89 |
| 2013–14 | 30.00 | 30.00 | 25 |
| 2014–15 | 30.00 | 30.00 | 60 |
| 2015–16 | 30.00 | 30.00 | 37 |
| 2016–17 | 30.00 | 30.00 | 43 |
| 2017–18 | 30.00 | 30.00 | 73 |
| **மொத்தம்** | **478.35** | **478.35** | **499** |

## இணைப்பு 2.4 (ஆ)
## கடன் உத்தரவாத நிதிகுழும திட்டம்

| வருடம் | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது (ரூபாய் இலட்சத்தில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2011–12 | 4.56 | 4.56 | 9 |
| 2012–13 | 10.00 | 9.88 | 22 |
| 2013–14 | 10.00 | 10.00 | 27 |
| 2014–15 | 10.00 | 10.00 | 53 |
| 2015–16 | 10.00 | 10.00 | 51 |
| 2016–17 | 10.00 | 10.00 | 44 |
| 2017–18 | 25.00 | 25.00 | 101 |
| **மொத்தம்** | **79.56** | **79.44** | **307** |

## இணைப்பு 2.5
## வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) சாதனை விவரம்

| வருடம் | எண்ணிக்கை | வழங்கப்பட்ட மானியம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2011–12 | 4,759 | 1,319.86 |
| 2012–13 | 4,804 | 1,466.31 |
| 2013–14 | 4,657 | 1,499.53 |
| 2014–15 | 3,465 | 1,817.67 |
| 2015–16 | 5,822 | 3,463.18 |
| 2016–17 | 5,368 | 3,375.00 |
| 2017–18 | 4,707 | 3,000.00 |
| மொத்தம் | **33,582** | **15,941.55** |

## இணைப்பு 2.6
## பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)
## சாதனை விவரம்

| நிதியாண்டு | எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட விளிம்புத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2011–12 | 1,560 | 2,909.03 |
| 2012–13 | 1,316 | 2,258.40 |
| 2013–14 | 1,036 | 2,366.89 |
| 2014–15 | 1,256 | 2,827.71 |
| 2015–16 | 1,090 | 2,252.66 |
| 2016–17 | 1,395 | 3,425.80 |
| 2017–18 | 2,039 | 4,609.96 |
| மொத்தம் | **9,692** | **20,650.45** |

# இணைப்பு 2.7

## “புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்” ஆண்டுவாரியான பயனாளிகளின் விவரங்கள் கீழ்வருமாறு

(ரூபாய் இலட்சத்தில்)

| பொருள் | 2012–13 | | 2013–14 | | 2014–15 | | 2015–16 | | 2016–17 | | 2017–18 | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண் | மானியம் | எண் | மானியம் | எண் | மானியம் | எண் | மானியம் | எண் | மானியம் | எண் | மானியம் | எண் | மானியம் |
| பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் | 559 | 6,531.39 | 1,247 | 12,380.70 | 1397 | 11,720.17 | 1,263 | 13,177.31 | 1264 | 12,560.51 | 1274 | 14045.89 | 7004 | 70415.97 |
| தற்காலிக கடன் ஒப்பளிப்பு | 305 | 3,902.94 | 744 | 7,847.27 | 857 | 7,681.80 | 856 | 9,765.04 | 765 | 8,525.97 | 823 | 9915.96 | 4352 | 47638.98 |
| தொழில் முனைவோர் பயிற்சி பெற்றோர் | 284 | – | 645 | – | 789 | – | 822 | – | 602 | – | 610 | – | 3752 | – |
| இறுதி கடன் ஒப்பளிப்பு பெறப்பட்டவை | 224 | 2,504.57 | 482 | 4,952.01 | 555 | 5,157.25 | 466 | 4,600.28 | 536 | 5,765.33 | 605 | 7024.95 | 2868 | 30004.39 |
| மானியம் | 218 | 2,385.76 | 456 | 4,333.52 | 172 | 995.42 | 585 | 4,280.52 | 501 | 7,072.55 | 480 | 5591.97 | 2412 | 24659.74 |

## இணைப்பு – 3.1
## சிட்கோ நிறுவனத்தால் தற்போது பராமரிக்கப்படும் 113 தொழிற்பேட்டைகள்

| வ. எண் | மாவட்டம் | வ. எண் | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | கிண்டி | அரசு | 1958 | 404.08 |
| | | 2 | அரும்பாக்கம் | சிட்கோ | 11979 | 3.92 |
| | | 3 | வில்லிவாக்கம் | சிட்கோ | 11979 | 2.04 |
| | | 4 | கொடுங்கையூர் | சிட்கோ | 11979 | 7.88 |
| 2 | திருவள்ளூர் | 5 | அம்பத்தூர் | அரசு | 11963 | 1167.00 |
| | | 6 | காக்களூர் | அரசு | 11988 | 283.01 |
| | | 7 | திருமழிசை | சிட்கோ | 11988 | 160.85 |
| | | 8 | கும்மிடிபூண்டி | சிட்கோ | 11988 | 25.24 |
| | | 9 | ஆர்.கே.பேட்டை | சிட்கோ | 11996 | 8.15 |
| | | 10 | விச்சூர் | சிட்கோ | 11994 | 59.16 |
| | | 11 | திருமுல்லைவாயல் (ம.தொ.பூ.) | சிட்கோ | 22001 | 246.07 |
| | | 12 | செங்கரை | சிட்கோ | 2017 | 36.25 |
| 3 | காஞ்சிபுரம் | 13 | காஞ்சிபுரம் | அரசு | 11968 | 37.95 |
| | | 14 | மறைமலைநகர் | சிட்கோ | 11981 | 39.50 |
| | | 15 | ஆலத்தூர் | சிட்கோ | 11984 | 150.00 |
| | | 16 | திருமுடிவாக்கம் (முதன்மை) | சிட்கோ | 11993 | 201.11 |
| | | 17 | திருமுடிவாக்கம் (குறு) | சிட்கோ | 22013 | 5.262 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 18 | திருமுடிவாக்கம் (ம.தொ.பூ.) | சிட்கோ | 12002 | 11.48 |
| | | 19 | திருமுடிவாக்கம் பகுதி–2 | சிட்கோ | 2017 | 22.44 |
| | | 20 | தண்டரை | சிட்கோ | 2017 | 44.30 |
| 4 | வேலூர் | 21 | காட்பாடி | அரசு | 1968 | 19.48 |
| | | 22 | அரக்கோணம் | அரசு | 1968 | 51.74 |
| | | 23 | ராணிப்பேட்டை | சிட்கோ | 1972 | 113.44 |
| | | 24 | முகுந்தராயபுரம் | சிட்கோ | 1980 | 86.19 |
| | | 25 | வன்னிவேடு | சிட்கோ | 1987 | 16.44 |
| | | 26 | விண்ணமங்கலம் | சிட்கோ | 2009 | 10.49 |
| | | 27 | வாணியம்பாடி | சிட்கோ | 2013 | 7.08 |
| 5 | திருவண்ணாமலை | 28 | திருவண்ணாமலை | அரசு | 1968 | 15.56 |
| 6 | கிருஷ்ணகிரி | 29 | கிருஷ்ணகிரி | அரசு | 1965 | 41.86 |
| | | 30 | ஊத்தங்கரை | சிட்கோ | 1995 | 41.28 |
| | | 31 | ஓசூர் (சிப்காட்) | சிட்கோ | 1976 | 95.15 |
| | | 32 | ஓசூர் (புதியது) | சிட்கோ | 1999 | 18.80 |
| | | 33 | பர்கூர் | சிட்கோ | 1995 | 31.64 |
| | | 34 | போலுப்பள்ளி | சிட்கோ | 2009 | 60.96 |
| 7 | தருமபுரி | 35 | தருமபுரி | அரசு | 1965 | 20.28 |
| | | 36 | கடகத்தூர் | சிட்கோ | 2009 | 7.02 |
| | | 37 | பர்வதனஹள்ளி | சிட்கோ | 2014 | 29.89 |
| | | 38 | ஈச்சம்பாடி | சிட்கோ | 2017 | 50.46 |
| 8 | சேலம் | 39 | சேலம் | அரசு | 1967 | 19.55 |
| | | 40 | மேட்டூர் | அரசு | 1967 | 184.38 |
| | | 41 | கருப்பூர் (ம.தொ.பூ.) | சிட்கோ | 2004 | 51.24 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 42 | வீரபாண்டி | சிட்கோ | **1993** | 9.79 |
| | | 43 | கோரணம்பட்டி | சிட்கோ | **2017** | 16.61 |
| **9** | நாமக்கல் | 44 | நாமக்கல் | சிட்கோ | **1977** | 10.09 |
| | | 45 | திருச்செங்கோடு | சிட்கோ | **1980** | 9.18 |
| | | 46 | வேட்டம்பாடி | சிட்கோ | **2014** | 15.34 |
| **10** | ஈரோடு | 47 | ஈரோடு | அரசு | **1959** | 25.13 |
| | | 48 | நஞ்சை ஊத்துக்குளி | சிட்கோ | **1995** | 13.05 |
| | | 49 | பெருந்துறை | சிட்கோ | **2017** | 49.47 |
| **11** | கோயம்புத்தூர் | 50 | குறிச்சி | அரசு | **1972** | 88.43 |
| | | 51 | மலுமிச்சம்பட்டி | சிட்கோ | **1994** | 36.14 |
| **12** | திருப்பூர் | 52 | கணபதிபாளையம் | சிட்கோ | **1993** | 17.10 |
| | | 53 | திருப்பூர் | சிட்கோ | **1978** | 10.14 |
| | | 54 | குடிமங்கலம் | சிட்கோ | **1992** | 6.74 |
| | | 55 | ராசாத்த வலசு | சிட்கோ | **2011** | 51.80 |
| **13** | நீலகிரி | 56 | ஊட்டி | சிட்கோ | **1981** | 10.65 |
| **14** | கடலூர் | 57 | கடலூர் | அரசு | **1971** | 15.60 |
| | | 58 | வடலூர் | அரசு | **1972** | 26.22 |
| | | 59 | பெரிநெசலூர் | சிட்கோ | 2015 | 90.80 |
| **15** | விழுப்புரம் | 60 | பட்டணம் | சிட்கோ | **2014** | 60.55 |
| | | 61 | ஆசனூர் | சிட்கோ | **2009** | 212.83 |
| | | 62 | காட்டுவன்னஞ்சூர் | சிட்கோ | **2014** | 42.00 |
| | | 63 | வெண்மணி யாத்துார் | சிட்கோ | **2011** | 36.82 |
| **16** | பெரம்பலூர் | 64 | எலம்பலூர் | சிட்கோ | **2009** | 44.48 |
| **17** | தஞ்சாவூர் | 65 | தஞ்சாவூர் | அரசு | **1968** | 21.94 |
| | | 66 | கும்பகோணம் | அரசு | **1968** | 32.30 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 67 | பிள்ளையார்பட்டி | சிட்கோ | 1974 | 10.96 |
| | | 68 | நாஞ்சிக்கோட்டை | சிட்கோ | 1996 | 26.30 |
| | | 69 | பாளையபட்டி | சிட்கோ | 2012 | 104.37 |
| 18 | நாகப்பட்டினம் | 70 | நாகப்பட்டினம் | அரசு | 1966 | 20.97 |
| | | 71 | மயிலாடுதுறை | சிட்கோ | 2009 | 12.56 |
| 19 | திருச்சிராப்பள்ளி | 72 | துவாக்குடி | அரசு | 1974 | 478.38 |
| | | 73 | திருவெறும்பூர் | அரசு | 1974 | 74.50 |
| | | 74 | அரியமங்கலம் | அரசு | 1974 | 17.64 |
| | | 75 | கும்பக்குடி | சிட்கோ | 2009 | 24.46 |
| | | 76 | வாழவந்தான்கோட்டை (ம.தொ.பூ.) | சிட்கோ | 2003 | 51.70 |
| | | 77 | வாழவந்தான் கோட்டை | சிட்கோ | 2008 | 179.02 |
| 20 | கரூர் | 78 | கரூர் (வெள்ளாளப்பட்டி) | அரசு | 1974 | 26.63 |
| | | 79 | கரூர் (ஆத்தூர்) | சிட்கோ | 1993 | 36.29 |
| | | 80 | புஞ்சைகாலகுறிச்சி | சிட்கோ | 2016 | 52.076 |
| 21 | புதுக்கோட்டை | 81 | புதுக்கோட்டை | அரசு | 1974 | 23.18 |
| | | 82 | புதுக்கோட்டை (சிப்காட்) | சிட்கோ | 11988 | 51.45 |
| | | 83 | மாத்தூர் | சிட்கோ | 11975 | 26.00 |
| | | 84 | மாத்தூர் (புதியது) | சிட்கோ | 22013 | 19.92 |
| 22 | தேனி | 85 | தேனி | அரசு | 11963 | 26.59 |
| | | 86 | ஆண்டிபட்டி | சிட்கோ | 11994 | 22.34 |
| | | 87 | மரிக்குண்டு | சிட்கோ | 2017 | 79.40 |
| 23 | திண்டுக்கல் | 88 | திண்டுக்கல் | அரசு | 1965 | 39.90 |
| | | 89 | வத்தலகுண்டு | அரசு | 1965 | 16.26 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24 | மதுரை | 90 | கே.புதூர் | அரசு | 1960 | 56.05 |
| | | 91 | கப்பலூர் | அரசு | 1966 | 534.64 |
| | | 92 | கப்பலூர் (ம.தொ.பூ) | சிட்கோ | 2008 | 18.87 |
| 25 | இராமநாதபுரம் | 93 | பரமக்குடி | சிட்கோ | 1976 | 10.00 |
| | | 94 | கீழநாகாச்சி | சிட்கோ | 1993 | 10.00 |
| | | 95 | உரப்புளி | சிட்கோ | 1993 | 12.14 |
| 26 | சிவகங்கை | 96 | காரைக்குடி | அரசு | 1966 | 180.19 |
| | | 97 | சிவகங்கை | அரசு | 1996 | 70.61 |
| | | 98 | கிருங்காக்கோட்டை | சிட்கோ | 1993 | 21.85 |
| | | 99 | சக்கரக்கோட்டை | சிட்கோ | 2017 | 100.00 |
| 27 | விருதுநகர் | 100 | விருதுநகர் | அரசு | 1958 | 45.65 |
| | | 101 | ராசபாளையம் | சிட்கோ | 1995 | 41.13 |
| | | 102 | விருதுநகர் (நகர் புறம்) | சிட்கோ | 2013 | 37.54 |
| 28 | திருநெல்வேலி | 103 | பேட்டை | அரசு | 1959 | 50.55 |
| | | 104 | கடையநல்லூர் | சிட்கோ | 1992 | 10.00 |
| | | 105 | வள்ளியூர் | சிட்கோ | 2005 | 39.91 |
| | | 106 | குருக்கள்பட்டி | சிட்கோ | 2016 | 68.80 |
| 29 | தூத்துக்குடி | 107 | கோவில்பட்டி | அரசு | 1962 | 85.54 |
| | | 108 | தூத்துக்குடி பகுதி 1 | சிட்கோ | 1988 | 9.72 |
| | | 109 | தூத்துக்குடி பகுதி 2 | சிட்கோ | 2003 | 14.46 |
| | | 110 | பிடாநேரி | சிட்கோ | 2016 | 108.23 |
| 30 | கன்னியாகுமரி | 111 | கோணம் | அரசு | 1964 | 20.70 |
| | | 112 | மார்த்தாண்டம் | அரசு | 1964 | 7.50 |
| 31 | அரியலூர் | 113 | மல்லூர் | சிட்கோ | 2014 | 25.34 |
| | | | **மொத்தம்** | | | **7842.138** |

**இணைப்பு – 3.2**

**சிட்கோ நிறுவனம் நிர்வகித்து வரும் அரசு தொழிற்பேட்டைகளின் விவரங்கள்**

| வ. எண் | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | ஆரம்பிக்–கப்பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1) கிண்டி | 1958 | 404.08 |
| 2 | திருவள்ளூர் | 2)அம்பத்தூர் | 1963 | 1167.00 |
| | | 3)காக்களூர் | 1988 | 283.01 |
| 3 | காஞ்சிபுரம் | 4)காஞ்சிபுரம் | 1968 | 37.95 |
| 4 | வேலூார் | 5)காட்பாடி | 1968 | 19.48 |
| | | 6)அரக்கோணம் | 1968 | 51.74 |
| 5 | திருவண்ணாமலை | 7)திருவண்ணாமலை | 1968 | 15.56 |
| 6 | கிருஷ்ணகிரி | 8)கிருஷ்ணகிரி | 1965 | 41.86 |
| 7 | தருமபுரி | 9) தருமபுரி | 1965 | 20.28 |
| 8 | சேலம் | 10)சேலம் | 1967 | 19.55 |
| | | 11)மேட்டூர் | 1967 | 184.38 |
| 9 | ஈரோடு | 12) ஈரோடு | 1959 | 25.13 |
| 10 | கோயம்புத்தூா் | 13) குறிச்சி | 1972 | 88.43 |
| 11 | கடலூார் | 14) கடலூார் | 1971 | 15.60 |
| | | 15)வடலூார் | 1972 | 26.22 |
| 12 | தஞ்சாவூர் | 16) தஞ்சாவூர் | 1968 | 21.94 |

| வ. எண் | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | ஆரம்பிக்–கப்பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| | | 17)கும்பகோணம் | 1968 | 32.30 |
| 13 | நாகப்பட்டினம் | 18)நாகப்பட்டினம் | 1966 | 20.97 |
| 14 | திருச்சிராப்பள்ளி | 19)துவாக்குடி | 1974 | 478.38 |
| | | 20) திருவெறும்பூர் | 1974 | 74.50 |
| | | 21) அரியமங்கலம் | 1974 | 17.64 |
| 15 | கரூர் | 22) கரூர் (வெள்ளாளப்பட்டி) | 1974 | 26.63 |
| 16 | புதுக்கோட்டை | 23) புதுக்கோட்டை | 1974 | 23.18 |
| 17 | தேனி | 24) தேனி | 1963 | 26.59 |
| 18 | திண்டுக்கல் | 25)திண்டுக்கல் | 1965 | 39.90 |
| | | 26)வத்தலகுண்டு | 1965 | 16.26 |
| 19 | மதுரை | 27)கே.புதுார் | 1960 | 56.05 |
| | | 28) கப்பலுார் | 1966 | 534.64 |
| 20 | சிவகங்கை | 29)சிவகங்கை | 1966 | 70.61 |
| | | 30)காரைக்குடி | 1966 | 180.19 |
| 21 | விருதுநகர் | 31)விருதுநகர் | 1958 | 45.65 |
| 22 | திருநெல்வேலி | 32) பேட்டை | 1959 | 50.55 |
| 23 | துாத்துக்குடி | 33) கோவில்பட்டி | 1962 | 85.54 |
| 24 | கன்னியாகுமரி | 34) கோணம் | 1964 | 20.70 |
| | | 35) மார்த்தாண்டம் | 1964 | 7.50 |
| | | **மொத்தம்** | | **4229.99** |

## இணைப்பு – 3.3

## 2011-17 வரை நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகள்

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | துவங்கப்பட்ட வருடம் | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | இராசாத்தவலசு, திருப்பூர் மாவட்டம் | 2011 | 51.80 |
| 2 | மாத்தூர் (புதியது), புதுக்கோட்டை மாவட்டம் | 2013 | 19.92 |
| 3 | வாணியம்பாடி, வேலூர் மாவட்டம் | 2013 | 7.08 |
| 4 | வெண்மணியாத்தூர், விழுப்புரம் மாவட்டம் | 2011 | 36.82 |
| 5 | விருதுநகர் (நகர்ப்புறம்), விருதுநகர் மாவட்டம் | 2013 | 37.54 |
| 6 | பாளையப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் | 2012 | 104.37 |
| 7 | பிடாநேரி தூத்துக்குடி மாவட்டம் | 2016 | 108.23 |
| 8 | பட்டணம், விழுப்புரம் மாவட்டம் | 2014 | 60.55 |
| 9 | மின்னூர், வேலூர் மாவட்டம் | 2014 | 10.00 |

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | துவங்கப்பட்ட வருடம் | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 10 | காட்டுவன்னஞ்சூர், விழுப்புரம் மாவட்டம் | 2014 | 42.00 |
| 11 | மல்லூர், அரியலூர் மாவட்டம் | 2014 | 25.34 |
| 12 | பர்வதனஹள்ளி, தருமபுரி மாவட்டம் | 2014 | 29.89 |
| 13 | வேட்டம்பாடி, நாமக்கல் மாவட்டம் | 2014 | 15.34 |
| 14 | ஆசனூர் பகுதி–2, விழுப்புரம் மாவட்டம் | 2015 | 105.55 |
| 15 | பெரியநெசலூர் கடலூர் மாாட்டம் | 2015 | 90.80 |
| 16 | புஞ்சைகாலக்குறிச்சி கரூர் மாவட்டம் | 2016 | 52.076 |
| 17 | செங்கரை திருவள்ளூர் மாவட்டம் | 2017 | 36.25 |
| 18 | கோணாரம்பட்டி சேலம் மாவட்டம் | 2017 | 16.61 |
| | **மொத்தம்** | | **850.166** |

## இணைப்பு – 3.4

### குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் (பொது வசதி மையம்) மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள்முடிவுற்றவை/நடைமுறையில் உள்ளவை (30)

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (CFC) | மத்திய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஜவ்வரிசி குழுமம், சேலம். | 92.06 | 73.31 | 0.00 | 18.75 | 0.00 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 2 | தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | |
| 3 | தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | |
| 4 | தீப்பெட்டிக் குழுமம், ஸ்ரீவில்லிப் புத்தூர். | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | |
| 5 | தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | |
| 6 | தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | தீப்பெட்டிக் குழுமம், கோவில் பட்டி | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந் துள்ளன |
| 8 | அச்சு குழுமம், கிருஷ்ணகிரி | 1172.52 | 964.14 | 100.00 | 108.38 | 0.00 | |
| 9 | தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஒசூர். | 690.94 | 439.89 | 70.75 | 105.30 | 75.00 | |
| 10 | மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம் புத்தூர். | 288.20 | 99.00 | 16.52 | 172.68 | 0.00 | |
| 11 | பீங்கான் குழுமம், விருதாச்சலம். | 73.10 | 43.86 | மாநில அரசு 2 தொழிற் கூடங்களும் ரூ. 9.57 இலட்சமும் வழங்கி உள்ளது. | 18.45 | 10.79 | |
| 12 | கயிறு குழுமம், சிவகங்கை. | 658.90 | 500.01 | 65.89 | 93.00 | 0.00 | |
| 13 | அரிசி ஆலைக் குழுமம், கீழப்பாவூர். | 690.58 | 466.03 | 69.05 | 145.50 | 10.00 | |
| 14 | அரிசி ஆலைக் குழுமம், ஆலங்குளம் | 787.00 | 550.25 | 78.91 | 83.75 | 74.09 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | செங்கல் சூளை குழுமம், திருநெல்வேலி | 227.28 | 122.72 | 22.72 | 29.55 | 52.27 | திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது |
| 16 | பொறியியல் குழுமம், இராணிப் பேட்டை | 927.08 | 616.39 | 97.21 | 109.35 | 104.13 | |
| 17 | அச்சுக் குழுமம், சிவகாசி. | 1314.75 | 767.81 | 90.66 | 180.28 | 276.00 | |
| 18 | அரிசி ஆலைக் குழுமம், தஞ்சாவூர் | 212.06 | 100.23 | 40.43 | 21.40 | 50.00 | |
| 19 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேஷன்ஸ், சேலம் | 1632.74 | 1277.71 | 100.00 | 253.03 | 0.00 | |
| 20 | சென்னை பிளாஸ்டிக் குழுமம், காஞ்சிபுரம் | 1485.12 | 1026.96 | 100.00 | 258.16 | 100.00 | |
| 21 | பொறியியல் குழுமம், பரமக்குடி | 498.89 | 373.80 | 23.34 | 53.75 | 48.00 | |
| 22 | கேட் & கிரில் குழுமம், திருமுல்லைவாயில் | 284.87 | 197.93 | 29.69 | 57.25 | 0.00 | |
| 23 | ஆயத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய்புரம் | 104.24 | 74.28 | 9.36 | 20.60 | 0.00 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | தங்க நகை குழுமம், மதுரை | 356.46 | 255.80 | 29.14 | 39.92 | 31.60 | திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது |
| 25 | தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம். | 1333.96 | 886.45 | 98.78 | 162.18 | 186.55 | |
| 26 | தீப்பெட்டிக் குழுமம், ஓ.மேட்டுப் பட்டி | **346.89** | **204.64** | **36.00** | **42.50** | **63.75** | |
| 27 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் குழுமம், கும்பகோணம் | **126.30** | **98.83** | **7.90** | **19.57** | **0.00** | |
| 28 | கயிறு குழுமம், ஈரோடு | 592.51 | 401.44 | 48.65 | 60.00 | 79.42 | |
| 29 | பொறியியல் குழுமம், அம்பத்தூர் | 1124.42 | 805.33 | 54.44 | 114.65 | 150.00 | |
| 30 | தங்க நகை குழுமம், திருச்சி | 360.03 | 288.24 | 36.03 | 36.03 | 0.00 | |

## குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை

### வரவு–செலவு திட்ட மதிப்பீடு
### கோரிக்கை எண்.44

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்கு தலைப்பு | 2017–18 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு | 2017–18 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு | 2018–19 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| **2851.** கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 4,68,13,76 | 4,63,15,36 | 4,30,68,07 |
| **2852.** தொழில்கள் | 10,67,63 | 13,53,27 | 11,56,87 |
| **3451.** தலைமைச் செயலகம் பொருளாதாரப் பணிகள் | 3,47,25 | 3,88,06 | 4,38,34 |
| **4059.** பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு | -- | 8,39 | 1 |
| **4851.** கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 50,03,04 | 18,01,39 | 94,03,01 |
| **7610.** அரசுப் பணியாளர் முதலியோருக்கு கடன்கள் | 1 | 1 | 1 |
| **மொத்தம்** | 5,32,31,69 | 4,98,66,48 | 5,40,66,31 |